இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest

அக்டோபர் 2025 October | இதழ் 417 Issue

# தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

கனடிய மூத்த தமிழ் இதழ்

Premier Canadian Tamil Journal

ESTD From The Community To The Community 1991



## ஸ்காபரோ இடைத்தேர்தலில் நீதன் சண் வெற்றி!

சமூகத்துடன் இணைந்த வளர்ச்சி ஸ்தாபிதம் -1991

35 வது ஆண்டில் th Year

Growing with the Community ESTD-1991

ஆசிரியரிடமிருந்து... **From the Editor**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

தொலைபேசி:
416 920 9250

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
ரஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
என். விமலநாதன்
என். குமரதாசன்
இ. சிவலிங்கம்
வே. விவேகானந்தன்
ப. சிவசுப்பிரமணியம்

தொழில்நுட்ப உதவி
ஹரன்கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

இணையம்
www.tamilsinformation.info

# சட்டம் இருட்டறைதானா?

களவாடப்பட்ட வாகனமொன்றுடன் அனுமதி பெறாத துப்பாக்கிகளோடு குற்றச்செயல்களில் ஈடுபட்ட 14 வயதுச் சிறுவன் ஒருவனை பொலிசார் கைது செய்துள்ளனர்.

வன்கொடிய செயல்களில் ஈடுபட்ட 12 வயதுச் சிறுவன் ஒருவன் கொலைச் சம்பவமொன்று தொடர்பாக கைது.

கொலை முயற்சி ஒன்றில் சம்பந்தப்பட்ட சிறுவன் ஒருவன் (ஏற்கனவே நீதிமன்ற பிணையில் உள்ளவர்) பொலிசாரால் கைது.

தனது தாயாருடன் வீட்டில் நித்திரையிலிருந்த 8 வயது சிறுவன் ஒருவனை சுட்டுக் கொலை செய்த குற்றச்சாட்டில் இன்னொரு சிறுவன் கைதாகியுள்ளான்.

16 வயது இளைஞர் ஒருவர் உட்பட மேலும் 4 இளையோர் வாகனத் திருட்டுகள் சம்பந்தமாக பிடிபட்டுள்ளனர்.

மேலே சொல்லப்பட்டவை கடந்த மாதம் வெளிவந்த செய்திகளில் சில. இப்பொழுது நாளாந்தம் இவ்வாறான செய்திகள் அனைத்து ஊடகங்க - ளிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. வாகனத் திருட்டுகள், நகைக்கடை மற்றும் எரிபொருள் நிலைய கொள்ளைகள் என்பவை சாதாரணமாகி விட்டன.

இவைகள் தொடர்பாக கைது செய்யப்படுபவர்கள் நன்கு அனுபவப்பட்ட வயதான திருடர்களாகவும், கொள்ளையர்களாகவும் இருந்த காலம் மாறி, இப்போது இளையோரே - அதிலும் முக்கியமாக சிறார்கள் மிகத்துணிச்சலாக குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாடசாலைக்கு செல்ல வேண்டிய வயதில் இவர்கள் இவ்வாறான குற்றங்களில் ஈடுபடுவதற்கு பின்னால் மறைந்திருக்கும் ஒரு கும்பல் பற்றி அவ்வப்போது பொலிசார் தெரிவித்து வருகின்றனர். எனினும், சிறுவர்களும் இளையோரும் ஈடுபடும் குற்றச்செயல்கள் சகல நகரங்களுக்கும் வியாபித்து வருகிறது.

சிறுதொகை பணத்துக்காக குற்றச்செயல்களில் ஈடுபடும் இளம்பராயத் - தினர் தங்களது எதிர்காலம் பற்றி சிந்திக்கக்கூடியவர்களாகக் காணப் படவில்லை. அதேசமயம், தம்மை இவ்விடயங்களில் பயன்படுத்தும் கும்பல்களின் சூத்திரதாரிகளையும் இவர்கள் அறிந்திருக்கவில்லை.

குற்றச்செயல்களில் கைது செய்யப்படுபவர்கள் சிறார்களாகவிருப்பதால் இவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்படுவதில்லை. இதனால் நீதிமன்றப் பிணைகளில் வெளியில் வருபவர்களை பின்னாலிருந்து செயற்படுத்தும் கும்பல்கள் மீண்டும் மீண்டும் பயன்படுத்துகின்றன. சில சந்தர்ப்பங்களில் கொலைகளுக்கு அப்பால் வணிக நிலையங்கள், தனியார் குடியிருப்புகள் தீமூட்டி எரிக்கப்படும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான கொடூரமான குற்றச்செயல்களுக்கு பிணை மறுக்கவும், தண்டனையை அதிகரிக்கவும் வேண்டுமென சமூக அமைப்புகள் தொடர்ந்து வேண்டி வருகின்றன. எனினும், இதனை நடைமுறைப்படுத்த வேண்டியவர்கள் இதுபற்றி அக்கறை காட்டுவதாக தெரியவில்லை.

சட்டம் இன்றும் இருட்டறைதானா?

**திரு எஸ். திருச்செல்வம்**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**Established**
February 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

Tel: 416 920 9250

**E-mail**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

**General Manager**
R. R. Rajkumar

**Public Relation**
N. Vimalanathan
N. Kumaradasan
R. Sivalingam
V. Vivekananthan
P. Sivasubramaniam

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies

**Website**
www.tamilsinformation.info

## நீதன் சண் வெற்றி



ஸ்காபரோ - றூஜ்பார்க் தொகுதிக்கு கடந்த மாதம் 29ம் திகதி இடம்பெற்ற ரொறன்ரோ நகரசபையின் உறுப்பினர் பதவிக்கான இடைத்தேர்தலில் நீதன் சண் வெற்றி பெற்றார். நான்கு தமிழர்கள் உட்பட இருபது அபேட்ச - கர்கள் இத்தேர்தலில் போட்டியிட்டனர். ரொறன்ரோ கல்விச்சபையின் உறுப்பினராகவும், தலைவராகவும் பணியாற்றிய நீதன் சண், கனடாவில் தமிழ் மரபுரிமை திங்கள் நிகழ்வை ஆரம்பித்து அதன் தலைவராகவும் பணியாற்றி வருபவர். முன்னர் நகர - சபை உறுப்பினராக இருந்தபோது ஸ்காபரோவில் தமிழ் சமூக மையத்தை அமைப்பதற்கான பிரேரணையை இவரே முன்மொழிந்து சபையில் நிறைவேற்றியவர்.

## தீபாவளித் திருநாள் 19ம் திகதி

தமிழர்களின் பண்டிகைக் கொண் - டாட்டங்களில் ஒன்றான தீபாவளித் திருநாள் கனடாவில் இந்த மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமையென அறிவிக்கப்பட்டுள்ளது.

## Dream Career Achievement Awards

GTA Job's: Careers பத்திரிகை நிறுவனத்தின் சாதனை விருது நிகழ்வு வைபவம் நவம்பர் மாதம் முதலாம் திகதி ஸ்காபரோவில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் தங்கள் கல்வித்தகைமைக்கேற்ப தேர்ச்சி பெற்று அதே துறையில் பணியாற்றி வருபவர்கள் சுமார் 300 பேர் விருது வழங்கிக் கௌரவிக்கப் - படவுள்ளனர். அத்துடன் வேலை தேடுவதற்கு உதவும் ஐந்து நிறுவனங்களும் இந்நிகழ்வில் பங்கேற்கவுள்ளன.

# குடிவரவு விண்ணப்பங்களை ரத்துச் செய்யவும் இடைநிறுத்தவும் அதிகாரம் வழங்கும் திட்டம்

கனடிய எல்லைகளை வலுவாக்குவதற்காக முன்மொழியப்பட்டுள்ள புதிய சட்டம் (மசோதா), அதிகரித்து வருகின்ற குடியேற்ற விண்ணப்பங்களின் பரிசீலனை மற்றும் விண்ணப்ப பரிசீலனைக்கான காலவரம்பு ஆகியவைகளை பாதிப்பதற்கான மறை - முகத் திட்டமென்று குடிவரவாளர் நல அமைப்புகளும், துறைசார் நிபுணர்களும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இந்தச் சட்ட மூலம் கடந்த ஜூன் மாதம் நான்காம் திகதி கனடிய நாடாளுமன் - றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. கனடாவில் குடியேறுபவர்களின் ஆவணங்களை ரத்துச் செய்ய, இடைநிறுத்த, அல்லது மாற்றுவதற்கும், புதிதாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை பொதுநலம் கருதி தீர்மானித்து முடிவெடுக்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உரிமையளிக்கிறது.

குடியேற்ற அதிகாரிகள் எந்தெந்த பிரிவுகளில் புதிய அதிகாரங்களை பயன்படுத்து - வார்கள் என்று தெளிவில்லை என்றாலும், எந்த விடயத்தில் விண்ணப்பதாரிகள் பாதிக்கப்படலாம் என்பதையிட்டு அக்கறை கொள்ள வேண்டியுள்ளது என்பதையிட்டு சுட்டிக்காட்டப்படுகிறது. எதுவுமே சாத்தியமாகக் கூடியதாகவும், நியாயமற்றதாகவும் காணப்படாத நிலையில் விண்ணப்பதாரர்களுக்கு நியாயமற்ற முடிவை வழங்கலாமென அச்சம் வெளியிடப்படுகிறது.

பொதுநலம் கருதி முடிவுகள் எடுக்கப்படுமென்று கூறப்படினும் அதில் உண்மை எதுவுமில்லையென்று ரொறன்ரோ குடிவரவு வழக்கறிஞர்கள் தெரிவிக்கின்றனர். திடீரென்று பல வழக்குகள் பரிசீலிக்கப்பட மறுக்கப்படலாமென்றும் அதற்கான காரணங்களை வெளிப்படுத்த முடியாத நிலைமை உருவாகலாம் என்றும் சொல்லப்படுகிறது.

வெளிநாட்டவர்களை வரவேற்பதில் உலகின் முன்னணி நாடாக கனடா இன்றும் உள்ளது. இதனால் ஒருவர் நிரந்தர வசிப்பிட உரிமை பெறுவதற்கு ஒப்பீட்டளவில் தெளிவான பாதைகள் உள்ளன. ஆனால், அவர்களின் கல்விச் சான்றிதழ்கள், வேலை அனுபவம் போன்ற விடயங்கள் மீது மேலதிக அழுத்தம் மேற்கொள்ளப் - படுகிறது. இதனால் வெளிநாட்டவர்கள் கனடாவில் கல்வி கற்பதற்கும், வேலை செய்வதற்கும் தற்காலிக குடியிருப்பாளர்களாக வருவதற்கான ஊக்கம் அதிகரித்துள்ளது.

வரையறுக்கப்பட்ட குடிவரவு பரிசீலனை நடைமுறையில் உள்ளதால் - முக்கியமாக, கோவிட் என்னும் தொற்றுப் பரவல் காரணத்தின் பின்னர், நடைமுறைப்படுத்தப்படும் தாராள குடிவரவுக் கொள்கை சர்வதேச மாணவர்களையும், வெளிநாட்டுத் தொழிலாளர்களையும் இங்கு தங்க வேண்டிய நிலைக்குத் தள்ளியது. இதன் அடிப்படையில் கடந்த யூலை 31ம் திகதி நிலைவரத்தின்படி 2.2 மில்லியனுக்கும் அதிகமான விண்ணப்பங்கள் தேக்கநிலையிலிருந்தன. இவற்றுள் 892,400 வரையா - னவை நிரந்தர வசிப்பிட உரிமைக்காகவும், 1,079,300 வரையானவை தற்காலிக குடியுரிமைக்கானதாகவும் இருந்தன.

நிரந்தர வசிப்பிட உரிமைக்கு விண்ணப்பித்தவர்களில் அரைவாசிக்கு மேலானவர்களும், தற்காலிக வசிப்பிட உரிமைக்கு விண்ணப்பித்தவர்களில் 38 சதவீதமானவர்களும் அவர்களுடைய பரிசீலனைக் காலத்தை தாண்டியவர்களாக வசிக்கின்றனர். ‘சி-2’ மசோதாவை கன்சர்வேடிவ் கட்சியின் ஆதரவுடன் நிறைவேற்றக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது. குடியேற்றவாசிகளினதும், தற்காலிக தொழிலாளர்-களினதும் குடிவரவு விண்ணப்பங்களை நிறுத்த வேண்டுமென கன்சர்வேடிவ் கட்சி வலியுறுத்தி வருகிறது.



(29ம் பக்கம் வருக)



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

கர்ப்பம் தரித்து பத்து மாதங்கள் குழந்தையைச் சுமந்து பிரசவிக்கக்கூடிய மனித உருவ ரோபோக்களை சிங்கப்பூரிலுள்ள நான்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர்கள் உருவாக்கி வருகின்றனர்.. உலகின் முதலாவது கர்ப்ப ரோபோ என இதற்குப் பெயர் சூட்டியுள்ளனர். டாக்டர் ஜாங் கெஃபெங் தகவலின்படி இன்குபேட்டர்களின் தொடர்பற்ற இந்த ரோபோக்கள் செயற்கையாக உருவாக்கப்பட்ட கருப்பைகளைக் கொண்டுள்ளன. செயற்கை அமினோடிக் திரவத்தால் நிரப்பப்பட்ட இந்த செயற்கைக் கருப்பை முழுமையாக மனிதக் கருப்பை போலவே செயற்படுமாம்.

குளிப்பதற்கு கஸ்டப்படுபவர்களுக்கு ஒரு நற்செய்தி. உடுப்புகளை துவைப்பதுபோல மனிதர்களுக்கு குளிக்க வார்ப்பதற்கென ஜப்பானின் ஒசாகாவைச் சேர்ந்த சவர்ஹெட் நிறுவனம் இதற்கென நவீன மிஷின் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளது. ஒருவரின் உடலின் உயிரியல் தகவல்களை ஆராய்ந்து அவர்களின் மனதை அமைதிப்படுத்தும் காட்சி, ஒலி அடங்கிய நாற்காலி இதில் பொருத்தப்பட்டிருக்கிறது. சுமார் பதினைந்து நிமிடங்களுக்கு உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் இந்தக் குளியல் மிஷின் தாமாகவே இயங்கும்.

நூறு வயதை தாண்டி யப்பானில் வாழ்பவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சமாக உயர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் மட்டும் இங்கு நூறாவது பிறந்த நாளை 50,310 பேர் கொண்டாடியுள்ளனர். நூறு வயதை தாண்டியவர்களுக்காக யப்பானிய அரசு சிறப்பு இருப்பிடங்களையும் தனியான மருத்துவ வசதிகளையும் வழங்குகிறது. அத்துடன் யப்பானிய பிரதமர் பரிசாக பணமும் அளிக்கிறார். 1963ல் இங்கு நூறு வயதை தாண்டியவர்கள் 153 பேர் மட்டுமே இருந்தனர்.

சந்திரன் ஆண்டொன்றுக்கு 1.5 அங்குலம் வீதம் பூமியிலிருந்து விலகிச் செல்கிறது. இதனால் வருடத்துக்கு 25 மணி நேரம் நீடிக்கக் கூடுமென விஞ்ஞானிகள் எதிர்வு கூறுகின்றனர். அமெரிக்க மிச்சிகன் பல்கலைக்கழக இயற்பியல் மற்றும் வானியல் ஆராய்ச்சியாளர்களின் அறிக்கையின்படி சந்திரன் விலகிச் செல்வதன் காரணத்தால் பூமியின் சுழற்சியும் குறைந்து வருவது தெரியவந்துள்ளது. ஆனாலும் உயிருடன் வாழும் எவரும் இந்த மாற்றங்களை காணவோ அனுபவிக்கவோ முடியாதென இவர்கள் கூறுகின்றனர்.

புகைத்தலால் ஆண்டொன்றுக்கு சுமார் 13.5 லட்சம் பேர் இந்தியாவில் மரணமாகின்றனர். புகைத்தலால் வரும் நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு பதினேழு லட்சம் கோடி ரூபாவுக்கு மேலாக இந்திய அரசு செலவு செய்கிறது. புகைத்தலை சுமந்து வரும் காற்றினால் சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்கள் இங்குள்ள கிராமப்புறங்களில் அதிகரித்து வருகின்றன. புகைப்பவர்களை விட இதன் புகையை மெல்பவர்களே கூடுதலாக நோய்க்காளாவதாக சுகாதார இலாகா தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் தலைநகரான மொஸ்கோவில் காய்கறிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் முதல் பரிசை ஒரு பூசணிக்காய் வென்றுள்ளது. இதன் எடை 969 கிலோ. இதனை எவ்வாறு வளர்த்தது என்று இதன் உரிமையாளர் ஊடகங்களுக்கு சிறப்பு செவ்வி ஒன்றை வழங்கியுள்ளார். “இது முழுவதும் அறிவியல்தான். முதலில் அதற்கேற்ற விதையைத் தெரிந்தெடுக்க வேண்டும். ஒவ்வொரு கட்டமாக பூசணிக்கன்று வளர்ந்து வருவதை கவனிக்க வேண்டும். இந்தக் கண்காணிப்பு சூரிய ஒளியும், தண்ணீரும் சரியான முறையில் அதற்கு கிடைக்கிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும். அவ்வளவுதான்” என்று கூறியுள்ளார் தோட்டக்காரரான அலெக்சாந்தர் கசோப்.

# ஒன்ராறியோவில் வீதி கமராக்களை நீக்க நடவடிக்கை




ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள உள்ளாட்சிச் சபைகளால் வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்த பொருத்தப்பட்டுள்ள வீதி கமராக்களை நீக்கும் சட்டத்தை கொண்டுவர விருப்பதாக ஒன்ராறியோ மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் அறிவித்துள்ளார். ரொறன்ரோ நகர எல்லைக்குள் பொருத்தப்பட்டுள்ள வீதி கமராக்கள் இனம் தெரியாதவர்களால் தகர்க்கப்படுவது அண்மையில் அதிகரித்து வருகிறது. கடந்த ஒரு மாதத்தில் இருபது வரையான கமராக்கள் தகர்க்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட டக் ஃபோர்ட், நகரசபைகளுக்கான வருமானத்தைப் பெறும் நோக்கத்துடனேயே வீதி கமராக்கள் இயங்குகின்றன என்று குறிப்பிட்டதோடு, இவை நீக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டார். ஆனால், நகர பொலிசாரும், மருத்துவ அமைப்புகளும் பொதுமக்கள் பிரதிநிதிகளும் கமராக்களின் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

பாடசாலை மாணவர்களின் பாதுகாப்புக்கு இவை அவசியமானவை என்றும், வாகன சாரதிகளில் பலர் கமராக்களை கவனித்து தங்கள் வேகத்தைக் குறைத்து கொள்வதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால், ஒன்றாறியோ மாகாண அரசு இக்கருத்துகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை.

வேகமாக வாகனங்களைச் செலுத்துபவர்களை தண்டனைக்குட்படுத்த பொலிசார் நடவடிக்கை எடுக்க முடியுமென்றும், வேறு உத்திகளை இதற்காக பயன்படுத்த நிதி வசதி வழங்கப்படுமென்றும் ஒன்ராறியோ மாகாண அரசு தெரிவித்துள்ளது.

இலையுதிர் காலத்தில் கமராக்களை நீக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக இந்த மாதத்தில் கமராக்களை நீக்கும் சட்டம் ஒன்ராறியோ மாகாண சபையில் சமர்ப்பிக்கப்படுமென முதலமைச்சர் டக் ஃபோர்ட் அறிவித்துள்ளார். வோன் நகரசபை கடந்த மாதமே தமது எல்லைக்குட்பட்ட வீதி கமராக்களை நீக்கிவிட்டது.



பேராசிரியர் அமுது ஜோசெப் சந்திரகாந்தன்


# செயற்கை நுண்ணறிவுத் தகவல் ஆக்குமா? அழிக்குமா?

## ஊரும் உலகும் – 43

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக புதுமையும் புரட்சியும் மிக்க பல அரிய நூல்களை எழுதிப் புகழ்பெற்ற பேராசிரியர் யுவல் நோவா ஹரார் இருபத்தியோராம் நூற்றாண்டின் முன்வரிசையிலுள்ள பேரறிஞர்களுள் ஒருவர். இவ்வாண்டு செப்டம்பர் மாதம் வெளிவந்த இவரது நெக்ஸஸ் (Nexus) இணைப்பு: கற்காலம் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) வரையிலான தகவல் வலையமைப்புகளின் சுருக்கமான வரலாறு எனும் நூல் அறிவார்ந்த வாசகர் பலரின் அதீத வரவேற்பைப் பெற்றுவருகின்றது.

மனித வாழ்வின் வளத்தையும் வளர்ச்சியையும் மெருகூட்டி வளர்ப்பதில் பன்னிலைப்பட்ட தகவல் வலையமைப்புகள் பாரிய பங்களிப்புகளை வழங்கியுள்ளனவேயாயினும் உலகின் உருவாக்கத்திற்கு பெருமளவில் உதவிய இவை இன்று அதன் அழிவுப் பாதைக்கு வழிசெய்கின்றனவா என்ற கேள்விக்கு விடைகாணுவதே இந்த நூலின் முக்கிய நோக்கமாகும்.

தகவல்கள் பயனுள்ளவையேயாயினும், நன்மையான தீமையான தவறான தகவல்களை மிகச்சாதுரியமாகப் பயன்படுத்தி உலகின் பல சமூகங்களும், நாடுகளும், அரசியல் அமைப்புகளும் நீண்ட காலமாகவே தங்களது இலக்குகளை அடைந்து வந்துள்ளதையும் இந்த நூல் கூர்மையாக ஆய்ந்துள்ளது. நேர்மனித ஈடுபாடு இல்லாத கணினிசார் செயற்கை நுண்ணறிவின் துரித வளர்ச்சி நமது இருப்பையே இன்று அச்சுறுத்துவதால், மக்கள் எதிர்கொள்ளவேண்டிய மிக அவசரமானதும் சில கடினமானவையுமான அறநிலைத் தேர்வுகளை இவர் இந்த நூலில் கோடிட்டுக் காட்டுகிறார்.




தகவல் என்பது முழு உண்மையின் மூலப்பொருளோ அன்றேல் எமது பாதுகாப்புக்காக நாம் கையில் எடுக்கும் ஓர் ஆயுதமோ அல்ல. இயற்கையின் பெரிய செல்வங்களாகிய நீரையும் நிலத்தையும் காற்றையும் ஒளியையும் பகிர்ந்து வாழும் மனித குலத்தின் பொதுமையையும் செழுமையையும் தள்ளிவைத்த நிலையில் நாம் கணினிசார் செயற்கை நுண்ணறின் கனிவுடன் மானிட வளர்ச்சியை மட்டுப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடக்கூடாதென்பதே இவரது முனைப்பான வாதம்.

கடந்த 100,000 ஆண்டுகளாக, 'சேபியன்களான' (sapiens) அல்லது விவேகமுள்ள புத்திஜீவிகளான மனிதர்கள் மகத்தான சாதனைகளை அள்ளிக் குவித்து வருகிறோம். ஆனால் எமது கண்டுபிடிப்புகள், வெற்றிகள் அனைத்தும் எங்களை இருத்தலியல் நெருக்கடியில் இன்று சிக்க வைத்துள்ளது என அவர் எச்சரிக்கிறார். இக்காலத்தில் உலகின் சுற்றுச்சூழல் பிரச்சனைகள்கூட அழிவின் விளிம்பில் எம்மைத் தள்ளியுள்ளன.

தவறான தகவல்களே இன்று ஏராளமாக உள்ளன. நாம் கணினிசார் செயற்கை நுண்ணறின் யுகத்திற்குள் மிக வேகமாக விரைகிறோம். இது ஆபத்தானது என எச்சரிக்கும் இவர் இந்தச் செயற்கை நுண்ணறின் புதிய தகவல் வலையமைப்பு எம்மை அழிக்கும் வழியில் இன்று அச்சுறுத்துகிறது. எமது சுய அழிவுக்குக்கான காரணிகளாய் நாம் ஏன் கடுகதியில் மாறிவருறோம் என்பதே நூலாசிரியரின் ஆதங்கம்.

மனித வரலாற்றின் நீண்ட பாதையை ஆராய்ந்து, தகவல் ஓட்டம் நம்மையும், நமது உலகத்தையும் எவ்வாறு வடிவமைத்துள்ளது என்பதைக் கருத்தாழத்துடன் விளக்கியுள்ளார். கற்காலத்திலிருந்து, புனித பைபிளின் ஆரம்பகாலம் ஊடாக நவீன காலத்தில் ஸ்ராலினிசம், நாசிசம் ஆகியவற்றின் எழுச்சி போன்ற பல வரலாற்று அழிவுகளுக்குள் எம்மை அழைத்துச் சென்று, தகவலுக்கும் உண்மைக்கும் அதிகாரத்துவத்திற்கும் புராணங்களுக்கும் ஞானத்திற்கும் இடையிலான சிக்கலான உறவைக் கருத்தில் கொள்ளுமாறு அவர் எம்மை அறிவுறுத்துகிறார்.

கடந்த பத்தாண்டுகளாக கணினிசார் செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சிபற்றி ஆய்வதில் அதிக நேரம் செலவிட்ட யுவல் நோவா ஹராரிக்கு, இந்த அச்சுறுத்தல் கற்பனைக்கு எட்டாததாகவும், நயவஞ்சகமாகவும் தோன்றுகிறது. "புனிதர்களைக் கையாள, மூளையை கணினிகளுடன் இணைக்க வேண்டிய அவசியமில்லை" என்று இவர் காத்திரமாக கூறுகிறார். "ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தீர்க்கதரிசிகள், கவிஞர்கள் மற்றும் அரசியல் வாதிகள் சமூகத்தை மாற்றவும் மறுவடிவமைக்கவும் மொழியையே பயன்படுத்தியுள்ளனர். இப்போது அதை எப்படி செய்வது எனக் கணினிகள் எமக்கு கற்பிக்கின்றன. ஒருவரைக் கொன்றழிக்க ரோபோக்களை அனுப்ப வேண்டிய அவசியமில்லை. அந்த தூண்டுதலை முடுக்க செயற்கை நுண்ணறிவின் வழி மனிதர்களையே அவர்களால் கையாள முடியும்."

உதாரணமாக, பயனர் ஈடுபாட்டை அதிகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த முகநூல் வழிமுறைகள், வெகுஜனக் கொலை மற்றும் இனஅழிப்புக்கு தூண்டுதலாக இருந்ததையும் ரோஹிங்கியா இனத்தின் எதிர்ப்பு பிரசாரத்தை ஊக்குவிப்பதன் மூலம் 2016-17ம் ஆண்டில் மியான்மரில் நடந்தவையையும் நாம் கண்டோம் எனச் சுட்டிக்காட்டி, சாட்போட்களிடமிருந்து வரும் தவறான பல தகவல்களால் நாம் இப்போதே மூழ்கடிக்கப்படுகிறோம் என விளக்கியுள்ளார்.

அதிகாரத்தில் உள்ளவர்கள் தனிப்பட்டவர்களின் வாழ்க்கையைப் பற்றிய தரவுகளை வேறு வழிகளில் பயன்படுத்தவும் பத்திரிகைகள், நூல்கள் மற்றும் ரேடியோக்கள் போன்ற முந்தைய தொழில்நுட்பங்களைப் போலல்லாமல், கணனிசார் செயற்கை நுண்ணறிவு என்பது தானாகவே முடிவுகளை எடுக்கவும் யோசனைகளை உருவாக்கவும் கூடிய கருவியாகும்" என்று அறிவுரை தந்துள்ளார்.

நூலின் சில பகுதிகள் மிகவும் புத்திசாதுரியமானவை. அபாரமான துணிச்சல்மிக்கவை. கணினிசார் செயற்கை நுண்ணறிவின் ஆபத்தான அத்துமீறல்களைத் தடுக்கும் வசதிகள் ஜனநாயக சமூகங்களுக்கு உள்ளது என்பதையும், தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பில்லியனர் உரிமையாளர்கள் தங்களைத் தாங்களே ஒழுங்குபடுத்தி எம்மை சடப்பொருள் போல் பாவிக்க நாம் அனுமதிக்கக்கூடாது என்பதையும் பணிவோடு இந்த நூலில் எமக்கு நினைவூட்டுகிறார்.

# Mark Carney's next big test is solving immigration concerns

Canada's Prime Minister Mark Carney's government is contemplating its immigration targets for the next three years. It should heed the wishes of most Canadians and make drastic cuts.

In its first failure to take Canadians' immigration concerns seriously, Carney's government has already exceeded this year's targets for temporary foreign workers. But another test rapidly approaches.

Immigration Minister Lena Diab is expected to announce the government's immigration targets for the next three years. Most Canadians — native-born and immigrant alike — want less immigration. The government needs to make a sharp U-turn now and heed the public's wishes.

Making matters worse, Canada's housing stock has not kept up with demand for decades because of burdensome municipal regulations that make the construction of housing prohibitively expensive. Rapidly increasing the population through immigration has only worsened this shortage. To fix the long-term housing crisis for Canadians, the Carney government should withhold funds from cities until they cut red tape to increase housing construction.



Even then, building more homes will take time. The government needs to reduce the number of newcomers now.

As housing prices spiked, wait times for medical treatment reached new highs across the country. Emergency room physicians blame rapid population growth — among other factors — for soaring emergency room wait times, with the average in Ontario reaching 22 hours in 2023.

A Fraser Institute study found that the average wait time between a general practitioner's referral and receipt of treatment by a specialist reached 30 weeks in 2024, up from 9.3 weeks in 1993. Even in crucial fields like radiation oncology, in which cancer patients receive potentially life-saving treatment, the average wait time between specialist referral and receipt of treatment was two and a half weeks — longer than what physicians deem "clinically reasonable."

Even the most dynamic health-care system in the world would struggle to keep up with a population boom like the one Canada has experienced over the last decade. Canada's sclerotic, mostly government-run system never stood a chance.

Meanwhile, as a growing number of foreign nationals have come to Canada, foreign conflicts have increasingly migrated to Canadian streets.

Canada is now one of the Western world's hot spots for Islamism and jihadism, as nefarious actors exploit lax immigration rules. A recent report by a D.C.-based non-profit that tracks international crime warned that Canada has become a "safe zone" for terrorist organizations. Iranian-backed terror networks are so embedded that the FBI recently warned a prominent Iranian-American critic of the regime in Tehran not to travel to Canada. At least nine recent Islamic terrorist plots have either been foiled on Canadian soil or involved Canadians abroad. Most recently, the RCMP arrested a Montreal teenager for allegedly planning a terrorist attack on behalf of ISIS.

Unsurprisingly, Canadians' perception of their country's immigration system is in freefall as 62% of Canadians — including 57% of immigrants — believe too many immigrants are being allowed into their country, more than double the number who felt that way a mere six years ago.

The decades-long Canadian consensus on immigration is broken. Canadians understand that generosity has its limits. They understand that a country that is endlessly open will eventually deplete its own resources and expose itself to the world's worst actors. If the government does not drastically reduce the flow of immigrants now, it is only a matter of time before Canada ceases to exist in the form that has made it such an attractive place to live in the first place.

*Opinion by Anthony De Luca-Baratta. He is a contributor to the Center for North American Prosperity and Security, a project of the Macdonald-Laurier Institute*

# கனடிய அரசியலில் சுழலும் கதிரைகள்

● உக்கிரன்

அரசியலில் பதவி உயர்வு, பதவி நீக்கம், பதவி துறப்பு என்பவை வழக்கமானவை. கனடிய அரசியலில் தற்போது இந்நிகழ்வுகள் அடிக்கடி இடம்பெறுகின்றன. கனடியப் பிரதமராக ஒன்பது ஆண்டுகள் பதவி வகித்த ஜஸ்ரின் ரூடோ இவ்வருட முற்பகுதியில் பதவி துறந்ததும், ரொறன்ரோ நகர முதல்வராகவிருந்த ஜோன் ரோறி இரண்டு வருடங்களுக்கு முன்னர் பதவியிலிருந்து விலகியதும் அண்மைக்காலத்தில் பிரசித்தி பெற்றவை.



கனடிய வங்கியின் கவர்னராகவிருந்த பொருளாதார நிபுணர் மார்க் கார்னி கனடிய லிபரல் கட்சியின் தலைவராகி பிரதமரானது எவரும் எதிர்பார்த்திராதது. இப்போது வெளிவந்து கொண்டிருக்கும் தகவல்கள் பெருமளவில் மாற்றங்கள் சம்பந்தப்பட்டவை.



ஜஸ்ரின் ரூடோ அரசில் அமைச்சர்களாகவிருந்த மூவர் ராஜதந்திரிகளாக நியமனம் பெறுகின்றனர். நிதி அமைச்சராக முன்னர் பதவி வகித்து, தற்போது பிரதமர் கார்னியின் அலுவலக பிரதானியாகவிருக்கும் டேவிட் லமற்றி ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவராக நியமனம் பெற்றுள்ளார். தற்போது இப்பதவியை வகித்து வரும் பொப் றே ஓய்வு பெறுகிறார்.



ஸ்காபரோ தென்மேற்குத் தொகுதியின் உறுப்பினரான ரொறன்ரோ முன்னாள் பொலிஸ் அதிபர் பில் பிளெயர் இங்கிலாந்துக்கான கனடியத் தூதுவராக நியமனம் பெறவுள்ளார். இவர் முன்னர் கனடிய பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர். ரூடோ அரசில் சக்திவள அமைச்சராக பதவி வகித்த ஜொனாதன் வில்கின்சன் ஐரோப்பிய யூனியனுக்கான தூதுவராக நியமனம் பெறவுள்ளார்.



பில் பிளெயர் இங்கிலாந்துத் தூதுவராக செல்வதால் ஏற்படும் ஸ்காபரோ தென்மேற்குத் தொகுதியில் லிபரல் கட்சி வேட்பாளராக போட்டியிடுவதற்கு ஜோன் ரோறி ஜுனியர் நாட்டம் காட்டி வருகிறார். இதற்கான ஆரம்ப வேலைகளில் அவர் ஈடுபட்டு வருவதாக கனடிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இவரது தந்தை ஜோன் ரோறி முன்னர் ரொறன்ரோ நகர முதல்வராக பணியாற்றியவர். கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்தவரான ஜோன் ரோறி அடுத்த வருடம் இடம்பெறவுள்ள ரொறன்ரோ நகர முதல்வர் தேர்தலில் போட்டியிடவிருப்பதாகவும் ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.



ரூடோ அரசில் பிரதிப் பிரதமராகவும், நிதி அமைச்சராகவும் இருந்த கிறிஸ்டி பிறீலான்ட் கார்னி அரசில் போக்குவரத்து அமைச்சராக பதவி வகித்தவர். கடந்த மாதம் இப்பதவியிலிருந்து விலகிய இவர் உக்ரெய்னுக்கான விசேட தூதுவராக நியமனம் பெற்றுள்ளார்.



ஒன்ராறியோ மாகாண அரசில் லிபரல் கட்சித் தலைவரான பொனி குரொம்பி தமது பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். கடந்த மாதம் இடம்பெற்ற கட்சித் தலைவர் போட்டியில் 57 வீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றாராயினும் உள்கட்சிப் பிரச்சனையால் இவர் பதவி விலகலை அறிவிக்க நேர்ந்தது. இவ்வருட முற்பகுதியில் இடம்பெற்ற ஒன்ராறியோ மாகாணத் தேர்தலில் இவர் வெற்றி பெறாதது குறிப்பிடத்தக்கது.



ஒன்ராறியோவின் என்.டி.பி. கட்சியின் தலைவர் மரிட் ஸ்ரைல்ஸ் கடந்த மாதம் நடைபெற்ற கட்சியின் மகாநாட்டில் 68 வீத வாக்குகளைப் பெற்று மீண்டும் தலைவராகியுள்ளார். 27 உறுப்பினர்களுடன் இருக்கும் இவர் எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவி வகிக்கின்றார்.



கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற கனடிய பொதுத்தேர்தலில் தோல்வியடைந்த பியர் பொலிவியர் அல்பேட்டா மாகாணத்தின் தொகுதியொன்றினூடாக மீண்டும் எம்.பியாகத் தெரிவாகி எதிர்கட்சித் தலைவராகியுள்ளார். இவரது கன்சர்வேடிவ் கட்சியில் மாநாடு அடுத்த வருடம் இடம்பெறவுள்ளது.



கனடிய என்.டி.பி. கட்சியின் தலைவராகவிருந்த ஜக்மித் சிங் பதவி விலகியதால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கான புதிய தலைவர் தெரிவு மாநாடு அடுத்த வருடத்தில் இடம்பெறவுள்ளது. கனடிய பசுமைக் கட்சியின் மூத்த தலைவர் எலிசபெத் மே அம்மையாரும் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் தலைமைப் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.



கவல்கணன் - ஆஸ்திரேலியா

# சுரேனின் உயிர்காத்த குருத்தணு தானம் சொல்லும் கதை

இயற்கை எங்களுக்கெல்லாம் ஒன்றே என்பதை நீங்கள் உணர்ந்திருந்ததால், நீங்கள் ஏற்கனவே வாழ்க்கையில் வெற்றிபெற்று விட்டீர்கள் என்று கூறுவேன். ஒரே காற்றை நாம் சுவாசிக்கிறோம், ஒரே நீரைப் பருகுகிறோம். இந்தப் பூமி எல்லோருக்கும் தாயாக இருக்கிறது. எனவே மனிதனின் உண்மையான வலிமை அவன் பிறர் மீதுள்ள அன்பும் ஒற்றுமையும்தான். பகை, பேராசை, சுயநலம் ஆகியவை எம்மைப் பிரிக்கலாம். அதேவேளை பரிவு, மனிதாப உதவி, நேசம் ஆகியவை நம்மை ஒன்றிணைக்கின்றன. உண்மையில் நாம் அனைவரும் ஒரே குடும்பம்.

அதனால்தான் நாம் அனைவரும் ஒன்று என்ற உணர்வு ஒவ்வொருவரின் மனதிலும் நிலைப்பட வேண்டும் என்று சில ஆன்மிகவாதிகள் போதிக்கிறார்கள். இந்த உணர்வே அமைதி, வளர்ச்சி, மகிழ்ச்சி ஆகியவற்றிற்கான அடித்தளம்.

அதேசமயம், இயற்கையில் நிகழும் பல பரிமாணங்களை நாம் கணிக்கவும், கணிதத்தின் மூலம் விளக்கவும் முடிகிறது. ஆனால் சில அமைப்புகள் மிகச் சிறிய மாற்றங்களாலேயே பெரிய எதிர்பாராத விளைவுகளை உருவாக்குகின்றன என்பதை (தமிழில் அலங்கோலக் கோட்பாடு என்று கூறக்கூடிய) Chaos Theory விளக்குகிறது. ஒரு சிறிய பட்டாம்பூச்சி சிறகடித்தால், அதனால் ஏற்படும் அலைகள் தூரத்தில் உள்ள வானிலை மாற்றத்தில்கூட தாக்கம் செலுத்தலாம் என்று இந்தக் கோட்பாடு விளக்குகிறது. ஒவ்வொரு சிறிய விடயமும் ஒரு பெரிய விளைவாக மாறும். அதனால், நாம் செய்யும் மிகச் சிறிய நல்ல செயல்கள்கூட உலகில் நல்ல அலைகளைப் பரப்பும். ‘அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்...’ என்று மகாகவி பாரதி அதைத்தான் பாடி வைத்தார்.

நான் சிட்னி நகரில் அண்மையில் கேள்விப்பட்ட ஒரு சம்பவம் இதற்கு நல்ல உதாரணம். அவருடைய பெயர் சுரேன். அவரது கதை ஆச்சரியத்தைத் தருவது மட்டுமல்ல, மனிதர் மேலுள்ள நம்பிக்கையை மேலும் வளர்க்கும் என்று நம்புகிறேன்.

மனநிறைவோடு வாழ்ந்து வந்த சுரேனின் வாழ்க்கை 2021ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு நொடியில் சிதைந்தது. வழமைபோல மருத்துவ பரிசோதனைக்குச் சென்ற அவருக்கு, மருத்துவர் கூறியது தலையில் பேரிடி வீழ்ந்ததுபோல இருந்தது. அவருக்கு acute lymphoblastic leukaemia (சுருக்கமாக ALL) என்ற கடும் நிணநீர்க் குழியப் புற்றுநோய் வந்திருக்கிறது என்றும் மிக மோசமான, ஆபத்து அதிகமான புற்றுநோய் வகை என்றும், நோயுற்ற எலும்பின் உட்பகுதியை (bone marrow) கதிரியக்க சிகிச்சை துடைத்தெறியும் என்றாலும், குருத்தணு (stem cell) மாற்று சிகிச்சை இல்லாமல், முழு மீட்புக்கான வாய்ப்பு குறைவு என்றும் மருத்துவர் கூறியிருக்கிறார். பொருத்தமான ஒரு நன்கொடையாளர் கிடைக்காவிட்டால் நாற்பது வயதான அந்த இளம் தந்தையின் வாழ்க்கை முடிவுக்கு வந்துவிடும் என்பதால், அவரது உறவினர்களும் நண்பர்களும் குருத்தணு தானம் செய்ய முன்வந்தார்கள்.

அவரது சகோதரனுடைய மரபணு மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று அனைவரும் நம்பியிருந்தார்கள். ஆனால் அது சரிவராமல் போன பின்னர் சுரேனின் மரபணுவுடன் ஒத்துப்போகும் ஒருவரை அவரது குடும்பத்தினரும் நண்பர்களும் தேடிக்கொண்டிருந்த ஒவ்வொரு நாள் கடக்கும்போதும் தனது வாழ்வின் எல்லையின் விளிம்பை தான் நெருங்கிக் கொண்டிருப்பதாக அவர் உணர்ந்தார்.

உலகளவில் 2021ம் ஆண்டில் ஓர் இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. அதில் சுமார் 71,220 பேர் மரணித்துள்ளார்கள். அது தவிர சுமார் 37,19,777 பேர் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டனர் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவிக்கிறது. இந்த ஆண்டு இதுவரை சுமார் 6,100 புதிய நோயாளிகள் இந்தப் புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்தத் தரவுகளில் தமிழர்களும் அடங்குவர்.

ஆனால், தமிழ்ப் பின்னணி கொண்டவர்கள் - குறிப்பாக இலங்கைத் தமிழ் பின்னணி கொண்டவர்கள் குருத்தணு தானம் செய்வதற்குப் பதிவு செய்வது மிகக்குறைவு. அப்படி தானம் செய்வதற்கு ஒருவர் ஒரு குறிப்பிட்ட வயதுக்கு முன்னர் பதிவு செய்திருக்க வேண்டும். பதிவு செய்வது என்பது மிகவும் சுலபமான வேலை என்றாலும், எமது மக்களிடையே இது பற்றிய போதிய விழிப்புணர்வு இல்லாததாலோ அல்லது தவறான கருத்துகள் இருப்பதனாலோ பலர் பதிவு செய்து கொள்வதில்லை. உங்கள் பெயர், முகவரி, தொடர்பு விபரங்கள், மரபு பற்றிய பின்னணி போன்ற சில கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும். அத்துடன் சிறுதுளி உமிழ்நீர் பகிர்ந்து கொள்ள வேண்டும். இந்தப் பதிவு, உலகின் பல பாகங்களிலும் பகிர்ந்து கொள்ளப்படும். குருத்தணு மாற்று அறுவை சிகிச்சை தேவைப்படுபவருடன் ஒருவருடைய மரபணு மிகவும் ஒத்துப் போகிறது என்றால் மட்டுமே பதிவு செய்தவரை அவர்கள் மீண்டும் தொடர்பு கொள்வார்கள்.

Human Leukocyte Antigen எனும் மனித வெள்ளை இரத்த அணு எதிரியாக்கி எழுநூறுக்கும் மேற்பட்ட மரபணுக்கூறுகளைக் கட்டுப்படுத்துகிறது. அதனால், ஒவ்வொரு மனிதரும் வெவ்வேறு வகையான மரபணுக்களைக் கொண்டிருக்கிறோம். அதனால்தான் எலும்பு மச்சை சிகிச்சைக்குத் தேவையான ஒரு கொடையாளரைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமான விடயமாக இருக்கிறது. அதிலும் எமது மக்கள் இதற்குத் தாமாக முன்வராத காரணத்தால் அந்தப் பதிவேட்டில் இருக்கும் நம்மவர் தொகை மிக மிகக் குறைவு. அதில் யாருடைய மரபணு பொருந்தப் போகிறது என்பதைத் தேடுவது வைக்கோல் போர் ஒன்றில் ஊசியைத் தேடுவதை விடக் கடினமான விடயம்.

கடந்த ஆண்டுகூட இன்னொரு ஆஸ்திரேலியாவாழ் தமிழருக்கும் இந்த நோய் வந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, அவருக்கும் குருத்தணு மாற்று சிகிச்சை தேவைப்படுகிறது என்ற தேடல் தற்போது நடந்து வருகிறது. அதுபற்றி சிட்னியில் கடந்த மாதம் நடந்த ஒரு நிகழ்ச்சியில் ஒரு புற்று நோய் மருத்துவர் விரிவாகப் பேசியிருந்தார். அவர் மேடையிலிருந்து இறங்கியதும் ஓர் இளம் பெண் அவரை அணுகியிருக்கிறார். அதிலிருந்துதான் இந்தக் கட்டுரை எழுதப்பட வேண்டும், பகிரப்பட வேண்டும் என்ற எண்ணம் உருப்பெற்றது.

அந்த இளம் பெண்ணின் பெயர் ஜெகாத்திரி. அவரது சகோதரி காயத்திரி அன்றைய நிகழ்ச்சியை ஒழுங்கமைத்தவர். தமது சகோதரிக்கு ஆதரவாக

( 27ம் பக்கம் வருக )



கனகேஸ்வரி நடராஜா

# நண்பர்களே உறவினராக மாறி வருகின்ற காலம்

கோடை காலத்தில் ஆரம்பமான பல்வேறு கொண்டாட்டங்களும் தொடர்ந்தவாறு இருக்கின்றன. சில வார இறுதி நாட்களில் ஒரே சமயத்தில் இரண்டு, மூன்று விழாக்களுக்கு செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏர்படுகிறது. இரண்டாம் தலைமுறையினரின் திருமண விழாக்கள், மைல்கல் என்று அழைக்கப்படும் முக்கியமான பிறந்த நாள் விழாக்கள் பெரும்பாலும் தங்கள் நண்பர்களை மனதில் வைத்தே திட்டமிடப்படுகின்றன. திருமண விழாக்களை ஓரளவுக்காவது பெற்றோரின் வேண்டுகோளை ஏற்று உறவினர்களை அனுசரித்து செய்கிறார்கள்.

இங்கு இடம்பெறும் வரவேற்பு உபசாரங்கள் பற்றி சொல்லவே தேவையில்லை. நண்பர்கள் போடும் கூச்சலுக்கும் கும்மாளத்துக்கும் அளவே இல்லை. இன்றைய இரண்டாம் தலைமுறையினருக்கு பல்கலாசார நண்பர்கள் பெருமளவில் உள்ளனர். இவர்களுள் கணிசமானவர்கள் இங்கு பிறந்தவர்கள். ஆகையால் பாடசாலைகளிலோ உயர்கல்வி நிலையங்களிலோ இவர்களோடு கல்வி கற்பவர்கள் பல்வேறு கலாசார பின்னணியை கொண்டவர்களாக இருப்பார்கள். பல திருமணங்கள் வெவ்வேறு கலாசார பின்னணிகளுக்கிடையே இடம்பெறுவதையும் பார்க்க முடிகின்றது. புலப்பெயர்வின் ஓர் அங்கமாக இது மாறிவிட்டது என்றும் சொல்லலாம்.

நண்பர்களின் அன்பு பற்றியும் முக்கியத்துவம் பற்றியும் எமது இலக்கியங்கள், திரைப்படங்கள் வாயிலாக நாம் அறிந்திருக்கிறோம். கிருஷ்ண பரமாத்மாவின் நண்பர் குசேலர் தாங்கொணா வறுமையில் வாடுகிறார். அவர் தனது கந்தல் துணியில் கட்டிக்கொண்டு வந்த ஒரு பிடி அவலை கிருஷ்ண பரமாத்மா ஆவலோடு ருசித்து உண்டார் என்பதை நாம் அறிவோம்.

இராமாயணத்தில் சரயு நதியைக் கடக்க உதவிய வேடுவன் குகனின் அன்புக்கு கட்டுண்ட இராமர், அவனோடு தோழமை பாராட்டியதையும், பரதனின் வருகை கண்ட குகன் "தோழமை என்று அவர் சொல்லிய சொல்லொன்றோ" என்று சூளுரைப்பதையும் கண்டுள்ளோம். மகாபாரதத்தில் துரியோதனினதும் கர்ணனினதும் நடிப்பின் மகத்துவத்தையும் காண்கிறோம். தெய்வப் புலவர் திருவள்ளுவர் எதனைத்தான் விட்டுவைத்தார். நட்பு என்று ஒரு அதிகாரத்தையே எழுதியுள்ளார்.

நடப்பாராய்தல், தீ நட்பு, கூடா நட்பு என நட்பியல் தொடர்பாக பல அதிகாரங்களை எழுதியுள்ளார். உயர்ந்த மனிதன் படத்தில் "அந்த நாள் ஞாபகம் வந்ததே நெஞ்சிலே" பாடலுக்கு சிவாஜி கணேசனும் மேஜர் சுந்தரராஜனும் உணர்ச்சி ததும்ப நடிக்கும் காட்சியை மறுக்க முடியுமா? நட்பு என்பது பெருமைமிக்கது, போற்றப்படவேண்டியது, பேணப்படவேண்டியது.

சிறுகுழந்தைகள் முதல் மூத்தோர் வரை மகிழ்வுடன் வாழ நட்பு இன்றியமையாதது.

புலப்பெயர்வு காரணத்தால் எம்மில் பலர் எமது நெருங்கிய உறவினர்களின் அன்பையும் உதவியையும் பெறமுடியாதுள்ளோம். கோடை விடுமுறையில் இடம்பெற்ற கொண்டாட்டங்களுக்கு ஏகப்பட்ட பல்வேறு இனத்தவர்கள் உலகின் பல பாகங்களிலிருந்தும் வந்திருந்தார்கள். இனத்தால் வேறுபட்டிருந்தாலும், அனைத்து இளம் தலைமுறையினரும் அநேகமாக ஒரே விதமான கலாசார விழுமியங்களைக் கொண்டவர்களாகவே காணப்பட்டனர்.

இவர்கள் அனைவருக்கும் ஆங்கிலத்தில் தொடர்பு கொள்ளும் ஆற்றல் உள்ளது. எனினும், இவர்களுக்கிடையே திடீரென பிணைப்போ பாசமோ ஏற்பட முடியாது. நாங்கள் வளர்ந்த காலத்தில் எமது இரத்த உறவுகளோடு மனம் விட்டுப்பேசி, கூடிக்குலாவி ஒன்றாக விளையாடி வளர்ந்தோம்.

அதனால் ஒருவகை பாசமும் நெருக்கமும் எமக்குள் தானாகவே ஏற்பட்டது. அவ்வாறான அன்னியோன்யமும் பாசமும் இங்கு திடீரென அருகில் நிற்பவர்களுடன் எமது பிள்ளைகளுக்கு ஏற்படுமென எதிர்பார்க்க முடியாது. இருப்பினும் தமது நண்பர்களின் உதவியுடனேயே மிகவும் நேர்த்தியாக தங்கள் கொண்டாட்டங்களையும் வைபவங்களையும் திட்டமிட்டு நடத்துகின்றனர். இதனால் நன்பர்களே உறவினர்களாக இன்று மாறிவருகின்றனர்.

சர்வதேச நண்பர்கள் தினத்தில் முகநூலில் வந்த ஒரு பதிவை தமிழர் தகவல் வாசகர்களோடு இங்கு பகிர்கிறேன்:

"பேச்சுத் துணைக்கு, பேசும்போது கேட்பதற்கு, துன்பங்களை பகிர்ந்துகொள்வதற்கு, தூங்கும்போது காத்திருக்க, நடைப் பயிற்சிக்குத் துணையாக, நல்லது கெட்டதைச் சொல்ல, பயணங்களின்போது பேசி மகிழ, படித்ததில் சிலவற்றை பகிர்ந்து கொள்ள, அறிவுரை சொல்ல - கேட்க, புறம் பேசாதிருக்க, பாசத்தைக் கொட்ட, ஓடிவிளையாட, உதவி என்றால் ஓடோடி வர, உயிருக்கு உயிராகப் பழகவென இவை அனைத்தும் கலந்த ஒரு நண்பன் வேண்டும். இது நடைமுறையில் சாத்தியமில்லை. இத்தனை குணாதிசயங்களும் கொண்ட ஒரு நண்பன் கிடைப்பது அரிதிலும் அரிது."

இவர்களின் விழாக்களில் கலந்து பம்பலாக கும்மாளமிடும் அத்தனை நண்பர்களையும் ஆருயிர் நண்பர்கள் என்று கூறமுடியாது. காலப்போக்கில் இவர்களுள் சிலரின் தொடர்புகள்கூட அற்றுப்போகலாம்.

ஆனாலும், இன்றைய திருமண விழாக்களில் பல்கலாசார சிநேகிதிகள் எமது பண்பாட்டு உடைகளில் சேலை அணிந்து, பூச்சூடி, பொட்டு வைத்து வருவதையும், சிநேகிதர்கள் வேட்டி சால்வையுடன் அதே கலர்களில் சேட் அணிந்தவாறு அனாயாசமாக கலந்து கொள்வதையும் பார்க்கும்போது மனதுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

நண்பர்களே உறவினர்களாக மாறிவரும் முக்கியமான காலத்தில் நாம் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மாற்றம் ஒன்றே மாற்றம் இல்லாதது.



இரா. சம்பந்தன்

# புறநானூறும் புதைக்கப்பட்ட செய்தியும்

ஆரிய திராவிடப் பகையென்ற ஒன்று தோன்றுவதற்கு முன்பு தங்களுக்கு வசதியும் உயர்வும் பாதுகாப்பும் கிடைக்கக் கூடிய வகையில் பிராமணர்கள் சாத்திரங்களையும் சம்பிரதாயங்களையும் ஏற்படுத்திக் கொண்டு கோலோச்சிய சங்க காலத்தின் பிற்பகுதியில் ஒருநாள். கரிகால் சோழ மன்னனின் மகனான நலங்கிள்ளியின் உறையூர் அரண்மனையிலே பிராமணப் புலவரான தாமப்பல் கண்ணன் என்பவரை நலங்கிள்ளியின் தம்பியான மாவளத்தான் கண்டுவிடுகிறான்.

வறுமையின் பிடியிலே சிக்கி ஏதாவது பரிசில் பெற்று வாழ்கையை நகர்த்த நினைத்துப் பாட்டோடு வரும் தமிழ்ப் புலவர்களுக்கிடையே சாத்திர மரபுகளைக் காட்டித் தன் அண்ணனை ஏமாற்றிக் காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் பிராமணப் புலவர்களைக் காணும் போதெல்லாம் அவன் மனம் வெறுப்பின் உச்சத்துக்கே போகும். அன்றும் அப்படித்தான்.

தாமப்பல் கண்ணனைக் கண்டவுடன், “என்ன புலவரே அண்ணனிடம் வந்தீர்களா. எனக்குப் பொழுது போகவில்லை. வாருங்கள் சற்றுத் தாயம் விளையாடலாம்” என்று அழைத்தான் மாவளத்தான். பதவியில் இல்லாவிட்டாலும் அரசனுக்குத் தம்பி. புலவரால் மறுக்க முடியவில்லை. தரும சங்கடமான நிலை. பிராணமணர்கள் பஞ்சமாபாதகங்கள் என்று ஒதுக்கிய ஐந்தில் ஒன்று சூது. அதை ஆடச் சொல்லிக் கேட்கின்றான் மாவளத்தான்.

தன் விதியை நொந்து கொண்டு புறத்தே புன்னகையும் அகத்தே கடுங்கோபமும் என்ற இரட்டை நிலைப்பாட்டோடு புலவர் தாயம் ஆடினார். கோபத்தினால் நிதானமிழந்து ஆடிய புலவரால் மாவளத்தானை பல சுற்றுக்களில் வெல்ல முடியவில்லை. மாவளத்தான் பார்க்காத சமயத்தில் அடுத்து அவன் வெல்ல இருந்த தாயக் கட்டை ஒன்றைப் புலவர் எடுத்து மறைத்து வைத்துவிட்டார்.

தாமதமாகத் தன் வெற்றி வாய்ப்பு திருடப்பட்டதை கண்ட மாவளத்தானுக்கு ஏற்கனவே இருந்த பிராமணத் துவேசத்தோடு கோபமும் சேர்ந்து கொண்டது. தன் கையிலே இருந்த தாயக் கட்டையால் வயது முதிர்ந்த பிராமணர் என்றும் பார்க்காமல் நெற்றியை அடித்து உடைத்துவிட்டான்.

அவனின் செயலால் ஆத்திரமடைந்த புலவர் உன் முன்னோர்கள் பிராமணர்களுக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் துன்பம் செய்ய மாட்டார்கள். நீ இப்படிச் செய்துவிட்டாய். நீ கரிகால் வளவனுக்குத்தான் பிறந்தாயா இல்லை வேறு யாருக்காவது பிறந்தாயா என்று கேட்டு விடுகின்றார். மன்னர் குலத்தில் பிறந்தவர்கள் மட்டுமல்ல மனித குலத்திலே பிறந்தவர்கள் யாருமே காதால் கேட்கக் கூடாத வார்த்தைகள் இவை.

மாவளத்தான் அமைதியாகத் தலைகவிழ்ந்து இருந்தான். நினைத்திருந்தால் கையிலே ஆயுதம் இருந்தது. புலவரின் தலையை அவன் சீவியிருக்கலாம். அப்படி அவன் நினைக்கவில்லை. ஒருவேளை அண்ணனிடம் வந்தவனைத் தாக்கிவிட்டோமே என்று கூட அவன் நினைத்திருக்கலாம். தன் தவறை உணர்ந்து அவன் அப்படி இருக்கிறான் என்று நினைத்து புலவர் அவனைப் புகழ்ந்து பாடல் ஒன்று எழுதினார். அந்தப் பாடல் புறநானூற்றிலே 43வது பாடலாகக் காணப்படுகின்றது.

நிலமிசை வாழ்ந ரலமர றீரத்
தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக்
காலுண வாகச் சுடரொடு கொட்கும்
அவிர்சடை முனிவரு மருளக் கொடுஞ்சிறைக்
கூருகிர்ப் பருந்தி னேறுகுறித் தொரீஇத்

தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி யஞ்சிச் சீரை புக்க
வரையா வீகை யுரவோன் மருக
நேரார்க் கடந்த முரண்மிகு திருவிற்
றேர்வண் கிள்ளி தம்பி வார்கோற்

கொடுமர மறவர் பெரும கடுமான்
கைவண் டோன்ற லைய முடையேன்
ஆர்புனை தெரியனின் முன்னோ ரெல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர் மற்றிது
நீர்த்தோ நினக்கென வெறுப்பக் கூறி

நின்யான் பிழைத்தது நோவா யென்னினும்
நீபிழைத் தாய்போ னனிநா ணினையே
தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்குஞ் செம்மல்
இக்குடிப் பிறந்தோர்க் கெண்மை காணுமெனக்
காண்டகு மொய்ம்ப காட்டினை யாகலின்

யானே பிழைத்தனென் சிறக்கநின் னாயுள்
மிக்கு வரு மின்னீர்க் காவிரி
எக்க ரிட்ட மணலினும் பலவே.

இப்பாட்டில் தாமற்பல்கண்ணனார் உனது குடிப்பிறப்பின் மீது சந்தேகம் கொள்கிறேன். ஆத்தியால் செய்த மாலையை அணிந்த உன் முன்னோர்கள் யாவரும் பார்ப்பனர் வருத்தம் கொள்ளும் செயல்களைச் செய்ய மாட்டார்கள். எனவே இத்தகைய செயல் உனது தகுதிக்கு ஏற்றதோ என்று நீ வெறுக்கும்படி கூறினேன்.

உன்னிடம் நான் செய்த தவற்றிற்கு கோபப்படுவாய் என்றாலும் நீ தவறு செய்தது போல மிகவும் வெட்கப்பட்டாய். இவ்வாறு உன்னிடம் தவறிழைத்தவர்களைப் பொறுத்துக் கொள்ளும் தலைவனே

உனது இந்தக் குலத்தில் பிறந்தோரிடம் எளிமை காணப்படும் என காட்சி தரும் வலிமை உடையோனே

நீ கருணை காட்டியதனால் நானே பிழைத்ததை என்ன சொல்வேன் பெருகி வரும் இனிய நீரையுடைய காவிரியின் மணல்மேடுகளில் உள்ள மணலை விட அதிகமாக உனது வாழ்நாள் சிறப்பதாக என சோழன் மாவளத்தானைப் பாராட்டுகின்றார்.

தவறை நான்தான் முதலில் செய்தேன் செய்தேன் என்று தாமப்பல் கண்ணனார் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கிறார். அது தாய வட்டை மறைத்த சிறு குற்றமா அல்லது உண்மையான ஏதாவது பெருங்குற்றத்தை மறைக்க புனையப்பட்ட இடைச் செருகலா என்பது தெரியவில்லை

இந்தப் பாட்டிலே தாயம் விளையாடியது பற்றி ஒரு செய்தியும் எந்த இடத்திலுமே இல்லை. பிராமணர் ஏதோ தப்புச் செய்ததும் அதனால் கோபங்கொண்டு மாவளத்தான் அவருக்கு ஏதோ துன்பம் செய்ததும் அதற்காக நீ சரியான அப்பனுக்குத்தான் பிறந்தியோ என்று புலவன் தப்பான

( 29 பக்கம் வருக )



மருத்துவர் போல் ஜோசேப்

# உடல் மொழி - பகுதி 5

## 'பரு'வப் பிரச்சனை

பருவம் வந்துவிட்டாலே பல பருவச் சமாச்சாரங்களும் கூடவே வந்து விடுவது இயற்கை. ஆணும், பெண்ணும் வளரிளம் பருவ வயதை அடையும்போது முதலில் தோன்றும் முகப் பருக்கள்தான் முதல் பிரச்சனை. பருக்களால் அழகு குலைவது மட்டுமல்ல, எரிச்சல், தாழ்வு மனப்பான்மை, முகம் கொடுத்து பேசுவதில் தயக்கம் போன்ற மனப் பிரச்சனைகளும் உண்டாகிறது.

இது மருத்துவத்தில் ACNE அல்லது ACNE VULGARIS என்றழைக்கப்படுகிறது. ஒரு பாடலில் "மின்னும் பருவம்கூட பவளம் தானே" என்ற வரிகள் வருகிறது. இது கற்பனைக்கு வேண்டுமானால் கவிதையின் பொய் அழகு சரியாகும். ஆனால் நிஜ வாழ்க்கையில் பருவின் பாதிப்புகள், அதன் பின்னரான தழும்புகள், வடுக்கள் என்று பாரிய பிரச்சனைகளுக்கு பருவ வயதினர் முகம் கொடுக்கின்றனர்.

நமது சருமத்தில் ஒவ்வொரு முடியும் (Hair) தோலில் வெளியே எட்டிப் பார்க்கும் இடத்தின் அடியில் செபேசியஸ் சுரப்பிகள் உள்ளன. அதன் அருகில் வியர்வைத் துவாரங்களும் உள்ளன. இந்த சுரப்பிகள் ஒரு விதமான சீபம் என்ற எண்ணெய்ப் பசையினை சுரந்து தோலினை வரட்சியிலிருந்தும், வெளியிலுள்ள சூழ்நிலைக்கு ஏற்றவாறும் பாதுகாக்கின்றன.

ஆனால் பதின்ம பருவ வயதில் அன்றோஜன் (Androgen) மற்றும் ரெஸ்ரெஸ்ரியோன் (Testosterone)என்ற ஹோமோன்கள் சுரப்பதால் இது செபேசியஸ் சுரப்பியைத் தூண்டி அதிகமான எண்ணை சுரக்கும். இதனால் தோலின் செல்கள் அதிகமாக வளர்ந்து சருமத் துவாரங்களில் அடைப்பு உண்டாக்குவதால் புரோபியோனி பக்ரீறியம் என்ற பக்ரீறியா கிருமி - யின் தாக்கம் ஏற்பட்டு சிறிய கொப்புளங்கள், தொற்றுக்கள் போன்றவை வந்து விடுகின்றன. இந்த பிரச்சனை எல்லாருக்கும் அல்ல. 80 சதவீதமான பதின்ம வயதினரைப் பாதிப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதிலும் பெரும் - பாலானவர்களுக்கு தானாகத் தோன்றி சிறிது காலத்தில் தானாகவே மறைந்து விடுகின்றன. ஆனால் பலருக்கு பெரிய கொப்பளங்கள், பருக்கள், வடுக்கள் என்று தொடர்கதைதான்.

இது முகத்தில் மட்டுமல்ல கழுத்து, மார்பு, உடலின் பின்புறம் என்று மற்ற இடங்களிலும் பரவிவிடும். இது பலருக்கு குடும்ப மரபு வழியாகவும் வர வாய்ப்புகளுண்டு. மாதவிலக்கு காலங்களில் இதன் தாக்கம் அதிகரித்து பின்பு குறைவதுமுண்டு. மேலும் சிலருக்கு அலர்ஜி என்ற ஒவ்வாமைகள் காரணமாகவும், மற்றும் அதிக எண்ணெய், கொழுப்பு உணவுகள், பால் மற்றும் Dairy உணவுப் பொருட்களாலும், கோழி இறைச்சி போன்ற சில மாமிச உணவுகள், இன்றைய இளையோரின் தவறான Fast Food உணவுப் பழக்கம் போன்றவையும் பருவின் முக்கிய காரணிகளாகும்.

இன்னும் கொஞ்சம் விரிவாகப் பார்ப்போம் என்றால் அதிகமான இனிப்புப் பதார்த்தங்கள், குறிப்பாக சொக்கலேற், போத்தலில் அடைக்கப்பட்ட குளிர்பா - னங்கள் போன்றவை இரத்தத்தில் குளுக்கோசின் அளவை அதிகரிக்கச் செய்வதால் அதிக இன்சுலின் தூண்டப்பட்டு ஹைப்பர் கெரட்டோசிஸ் மற்றும் ஹைப்பர் கிளைசீமிக் இன்டெக்ஸ் போன்றவையும் பருக்களை இன்னும் அதிகமாக்கும்.

பெண்களில் PCOS என்ற சினைப்பை நீர்க்கட்டிகளின் காரணமான ஹோமோன்களின் சமநிலை இன்மையும் பருக்களை இன்னும் பெருக்கி விடும். குறிப்பாக பெண்கள் பயன்படுத்தும் அழகு சாதனப் பொருட்கள் முகத்தின் மேல் பூசப்படும் பூச்சுகள் மற்றும் மேக்கப் எனும் பெயரில் மேனி மேலே அப்பும் இரசாயனங்கள் தோலின் ஊடாக உள்ளே சென்று பல விளைவுகளை ஏற்படுத்தும்.

பெரும்பாலான அழகுசாதன பொருட்களில் காணப்படும் இரசாயனங்கள் பெண்களில் பல ஹோமோன்களில் சமநிலையின்மை ஏற்படுத்துகின்றது. தொடர்ச்சியாக அவற்றை பயன்படுத்துவதால் அவற்றின் உறுத்தல் காரணமாக எபிஜெனற்றிக் மாற்றங்கள் கலங்களில் உருவாகி புற்றுநோய்களும் உண்டாகலாம்.

மலச்சிக்கல், மனச்சிக்கல் போன்றவையும் முகப்பருக்கள் வர காரணங்களாகும் என்பதையும் மறைக்க முடியாது. "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பது பழமொழி. உண்மையில் அகம் எனும் உடல் மற்றும் உள்ளத்துக் - குள்ளே உள்ள பல மாற்றங்களையும், கோளாறுகளையும் வெளிப்படுத்தும் ஒரு உடல் மொழியாக முகப்பருவை கருதலாம்.

முதலில் மருத்துவரிடம் சென்று ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வந்திருப்பது முகப்பருதானா அல்லது அதைப் போலுள்ள வேறு தோல் நோய்களா என்பதை உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும். அடுத்தது, மேலே குறிப்பிட்ட பருவுக்கான காரணங்களையும், அதனை அதிகப் படுத்தும் உணவுகளையும் தவிர்த்துக் கொள்ளுதல் அவசியமாகிறது.

முகத்தை நன்கு கழுவி, சோப் போடாமல், அதிக கெமிக்கல் இல்லாத body wash, liquid soap போன்றவற்றைக் கொண்டு இளஞ்சூடான நீரில் முகம் கழுவுதல் வேண்டும். மலச் சிக்கலைத் தவிர்க்க அதிக நார்ச்சத்து உணவுகளையும், தினமும் இளஞ்சூடான மூன்று லீற்றர் தண்ணீரையும் அருந்துங்கள்.

பழங்கள், காய்கறிகள், கீரைவகைகள் நாளாந்தம் உணவில் சேர்த்தல் அவசியம். இயற்கையான பழச்சாறுகள் அழகுக்கு அழகு சேர்க்கும். வியர்வை நன்றாக வெளியேறி, தோலின் துவாரங்களின் அடைப்பு நீங்க உடற்பயிற்சி அவசியம். பருக்களை நகங்களால் கிள்ளி விடுவது மிகவும் ஆபத்தானதாகும். ஏனென்றால் நிலா முகத்தில் இருக்கும் பள்ளங்கள் போல முகத்தில் தோன்றும் பள்ளங்கள் பின்பு வடுக்களாகி முகத்தின் அழகை கெடுத்து விடும்

கடலைமா, பயற்றம்மா, மஞ்சள் போன்றவற்றின் கலவையை நீர்விட்டுக் குழைத்து, முகத்தில் தடவி பின்பு கழுவலாம். வெள்ளரிக்காயை உணவாகவும், அரைத்து முகப் பூச்சாகவும் தடவலாம். முட்டை வெள்ளைக் கருவை

( 30ம் பக்கம் வருக )



கனடா மூர்த்தி

# கண்டதை மீண்டும் சொல்லுகிறேன் - 27

சென்ற இதழ்க் கட்டுரையை முடிக்கும்போது, 'தரம்' (Standard), 'விதிமுறை' (Norm) ஆகிய இரண்டையுமே ஏற்க மறுத்து வாழ விரும்பும்புவர்கள்கூட நம் சமூகத்தில் இருக்கிறார்கள் என்று கேலியாகச் சொல்லியிருந்தேன். அப்பேர்ப்பட்டவர்கள் யாராக இருக்க முடியும் என்பது குறித்து இரு நண்பர்கள் விவாதத்திற்கு வந்தார்கள். 'அப்பேர்ப்பட்டவர்கள் புதுமைவாதிகளாக அல்லது இன்றைய கால கட்டத்தின் புரட்சிவாதிகளாக இருக்கலாமல்லவா' என அந்த இரு நண்பர்களுமே ஒரே போலச் சொன்னார்கள். மறுத்தேன்.

இலக்கணத்தை நன்கு கற்றுத் தெளிந்தபின் அதன்வழிநின்று இலக்கணத்தை வேண்டுமென்றே மீறுபவர்களை வேண்டுமானால் நாம் புதுமைவாதிகள் என்று சொல்லலாம். ஆனால் இலக்கணத்தை நிராகரித்து இயங்குபவர்களையெல்லாம் புதுமைவாதிகள் என எப்படி ஏற்பது? வேண்டுமானால் அவர்கள் தங்களைத் தாமே அப்படிச் சொல்லிக்கொள்ளட்டும். நாம் சொல்லக் கூடாது' என்றுவிட்டேன்.

நண்பர்களோடு விவாதித்துக்கொண்ட எல்லாவற்றையும் இதில் எழுதமுடியாது. ஆயினும் இக்கட்டுரைத் தொடரைப் படித்துவிட்டு யாரோ ஒரிருவராவது விவாதம் செய்கிறார்களே என்றவகையில் ஒருவகைத் திருப்தி கிட்டியது. நாம் எதிர்பார்க்கும் 'தரம்', நம்மைக் கட்டுப்படுத்தும் 'விதிமுறை' ஆகிய இரண்டிற்கும் இடையேயான காந்தப்புலம்தானே விவாதங்கள். இந்த விவாதங்கள் ஒன்றை ஒன்று தள்ளவைக்கும் அல்லது சேர்த்துவைக்கும்.

தரம் குறித்து சொல்லும்போது, கடந்த செப்டம்பர் மாதம் ரொறன்ரோவில் நடந்த ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா (TIFF) குறித்துப் பேசவேண்டும்போல இருக்கிறது. 50 ஆண்டுகளாக TIFF தரமான திரைப்படங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை உலகளாவிய அளவில் புகழ்பெற வைக்க உதவுகிறது. திரைப்படங்களின் விளம்பரத்திற்கும், வியாபாரத்திற்கும் அது தொடர்புகளை ஏற்படுத்தித் தருகிறது. இந்த ஆண்டு விழாவிற்கு இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் வந்திருந்தார். அவர் இசையமைத்து இப்படவிழாவில் காண்பிக்கப்பட்ட 'காந்தி' தொடரின் முதல்நாள் திரையிடலில் கலந்து கொண்டார். மகாத்மா காந்தியின் ஆரம்ப அரசியல்தான் 'காந்தி' படத்தின் கதையாகும். அப்படத்திற்கான விளம்பரத்தையும், வியாபாரத்தை ஊக்குவிக்கும் நோக்கிலேயே ரஹ்மான் கலந்து கொண்டார். ஆனால் இதுவல்ல இங்கு நான் சொல்ல வருவது.

இந்த 2025ம் ஆண்டு திரைப்பட விழாவில் இளம் தமிழ்க் கனடியரான கலைநிதன் கலைச்செல்வனின் இயக்கத்தில் உருவான 'கறுப்பி' குறும்படம் காண்பிக்கப்பட்டது. TIFF50 உத்தியோகபூர்வத் தேர்வு இந்தப்படம். 12 நிமிடங்களே ஓடும் குறும் படமான அது, ஈழத்தவரான நாமெல்லாம் 'தரம்' குறித்து பெருமையுடன் சிலாகித்துப் பேசுவதற்கு ஏற்றதொரு கலைப் படமாக இருந்தது. படம் நடுத்தரவயதுத் தமிழ்ப் பெண்மணி கறுப்பி தனது பிறந்தநாளன்று குடும்பத்தினர் முன்னிலையில் தற்கொலை செய்யப்போவதாக அறிவிப்பதிலிருந்து ஆரம்பமாகி, தற்கொலை மனக்கசப்பு குறித்ததொரு பார்வையை மெல்லிய நகைச்சுவையோடு தந்தது. ஒளிப்பதிவிலும் தரம் தேவையெனக் கருதி 35மில்லிமீற்றர் பிலிமில் படத்தை இன்றைய டிஜிட்டல் யுகத்தில் உருவாக்கியிருக்கிறார் இயக்குனர் கலைநிதன் கலைச்செல்வன்.

இன்று டிஜிடல் ஒளிப்பதிவு ஒரு 'விதிமுறை' (Norm) ஆக மாறி வழக்கிலிருக்கும் நிலையில் சில இயக்குனர்கள் ஒளிப்பதிவின் 'தரம்' (Standard), பிலிமில் கிடைக்கிறது என்றும் சிந்திக்க ஆரம்பிக்கிறார்கள். 'கறுப்பி' குறும்படத்தைப் பார்த்தீர்களேயானால் பிலிமில் உருவாக்கும்போது கிடைக்கும் ஒளிப்பதிவின் உச்சபட்சத் தரத்தைக் கவனிப்பீர்கள். பிடிவாதமாக பிலிமில் படமாக்கிக் காட்டிய இயக்குனர் கலைநிதன் கலைச்செல்வனுக்கு அதற்காகவே தனியாக வாழ்த்துப் பாராட்டுக்களைத் தெரிவிக்க வேண்டும்.



**கலைநிதன் கலைச்செல்வன்**

ஈழத்தமிழ்க் கனடியர் ஒருவரின் படைப்பு உத்தியோகபூர்வமாக TIFFக்கு சென்றது இதுவே முதல்முறை - அந்தப் பெருமை இளைஞர் கலைநிதன் கலைச்செல்வனுக்கே சேரவேண்டும் என்று முதலில் நினைத்திருந்தேன். அதைச் சரிபார்க்க, தகவல்களுக்காக TIFF ஆவணங்களைத் துழாவியபோது ஈழத்தமிழ் கனடியர்கள் மட்டுமல்ல தமிழகம், மாலைதீவிலிருந்தும் இயக்குனர்கள் தமிழ் நிலைப்பட்ட படைப்புக்களை TIFFஇல் திரையிட்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. சென்னையிலிருந்து கனடாவிற்குக் குடிபெயர்ந்த தமிழரான ஸ்ரீனிவாஸ் கிருஸ்ணா இயக்கிய 'மசாலா' என்ற தமிழ்ப்படம் 1991ம் ஆண்டு திரையிடப்பட்டிருந்தது. அதே படம் 4K வடிவத்தில் தரம் உயர்த்தப்பட்டு 2024ம் ஆண்டு மீண்டும் TIFFல் திரையிடப்பட்டிருக்கிறது.

2024ம் ஆண்டு பிரெஞ்சு ஈழத்தமிழ் இளைஞரான லோரன்ஸ் வாலின் இயக்கிய 'Little Jaffna' என்ற முழுநீளத் திரைப்படமும், அதே ஆண்டு ஈழத்தமிழ்க் கனடிய யுவதியான மாயா பஸ்தியான் இயக்கிய 'Tigress' படமும் திரையிடப்பட்டிருக்கின்றன. 2022இல் ஈழத்தமிழ்க் கனடியரான வி.ரி. நயானி இயக்கிய 'This Place' என்ற திரைப்படமும் திரையிடப்பட்டிருக்கிறது.

அந்த வரிசையில் இப்போது 2025ம் ஆண்டின் தமிழ்க் கனடிய இளைஞனாக கலைநிதன் கலைச்செல்வன் இணைந்திருக்கிறார் என்பது ஈழத்தமிழருக்குப் பெருமையே.



கலாநிதி எம். சஞ்சயன்

# குரங்குகள் வாங்கும் பென்சன்

***சில வருடங்களுக்கு முன்னர் என் மகன் அப்போதைய இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமை சந்தித்தபோது அதைப் பதிவு செய்தார். நான் அதை மொழிபெயர்த்து மனித நேயத்தில் உயர்ந்து நிற்கும் இந்த மாமனிதர் நினைவாக மீண்டும் பதிவிடுகிறேன். - அ. முத்துலிங்கம்***

அந்த அலுவலகம் பிரம்மாண்டமானதாக, குடைந்து வைத்ததுபோல குறைவான வெளிச்சத்தில் இருந்தது. இடுப்பளவு உயரத்தில் இருந்து சீலிங் வரைக்கும் நீண்ட பிரெஞ்சு யன்னல்கள். பெரும்பாலான யன்னல்கள் வேலைப்பாடுகள் செய்த வெல்வெட் திரைச்சீலைகளால் மறைக்கப்பட்டு டில்லியின் சூரியனும், வெக்கையும் உள்ளே வராமல் தடுத்தன. புறாக்கள் யன்னல் விளிம்புகளில் உட்கார்ந்து சத்தமிட்டன.

அண்மையில் இருந்தமரங்களிலும், கட்டிடங்களிலும் குரங்குகள் நிறைய சஞ்சரித்தன. இயற்கையான வனப்பிரதேசச் சூழல் யன்னல்களை அங்காங்கே கறைபட வைத்திருந்தது. எந்த மனிதனுக்கு இந்த யன்னல்களை கழுவும் பணி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் யோசித்தேன். அதுவரை ஒரு பெண்பணியாளரைக்கூட நான் காணவில்லை.

அந்த அறையில் எதை எடுத்தாலும் அது பிரம்மாண்டமானதாகவே இருந்தது. பிரம்மாண்டமான சோபாக்கள், தடிப்பான கம்பள விரிப்புகள், ராட்சத தொங்கு விளக்குகள். அவருடைய மெய்க்காவலர்கள்கூட திடகாத்திரமாகவும், பாரமாகவும் இருந்தார்கள். பென்னம்பெரிய கதவுகள் வழியாகவந்து போகும் மிலிட்டரி உடையணிந்த உதவியாளர்கள்கூட கனமான ஆகிருதிகளுடன் காணப்பட்டார்கள். எல்லாமே பாரியதாக இருந்தது, ஒரு மேசையின்முன் உட்கார்ந்து கம்புயூட்டர் திரையை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அந்த மனிதரைத் தவிர. அவருடைய சிறியஉடலில் இருந்து சன்னமாகத்தான் குரல் எழும்பியது. அந்த அறையின் பரப்புக்குள் அவர் குரலை கேட்கவேண்டுமென்றால் சுற்றிவர கடுமையான மௌனம்தேவை. ஆனால் அந்தப் புறாக்கள் அவர் பேசுவதை மூழ்கடித்தன.

எல் எழுத்துப்போல உயர்ந்த மரத்தில் வடிவமைக்கப்பட்ட அவருடைய தொன்மையான மேசை, ஒரு தூரத்து மூலையில் தள்ளப்பட்டு, இந்த ஆடம்பரங்களுக்கு மன்னிப்பு கேட்பதுபோல காட்சியளித்தது.

அப்துல் கலாம் ஆட்சி செலுத்துவது போலவே இல்லை. இந்தப் பெரிய படாடோபங்களில் அவர் சங்கடப்படுவது போலவே தோற்றமளித்தார். ஒரு கல்விக்கூடத்திலோ, ஒரு பல்கலைக்கழகத்திலோ அவர் இன்னும்கூடுதலான சௌகரியத்துடன் தன்னை உணர்ந்திருப்பார் என்று எனக்குப்பட்டது. என்னையும் ஒரு மாணவர் போலவே அவர் வரவேற்றார்.

நான் பிபிசி குழுவுடன் கடந்த ஒரு மாத காலமாக விவரணப் படம் ஒன்று எடுப்பதற்காக இந்தியாவின் மூலைமுடுக்கெல்லாம் அலைந்திருந்தேன். உலக அழகி ஐஸ்வர்ய ராயின் பேட்டி அடுத்த நாளுக்கு தள்ளிவைக்கப்பட்டிருந்ததால் மூன்றுமாதம் முன்பாகவே ஒழுங்கு செய்திருந்த ஜனாதிபதியின் பேட்டியிலும் கடைசி நிமிடங்களில் சிறு மாறுதல் செய்யவேண்டி நேர்ந்தது. நாட்டின் ஜனாதிபதியிலும் பார்க்க நடிகை பிஸியாக இருந்ததைக்கண்டு பிபிசி குழு அதிசயித்தது. நாளய பேட்டியே கடைசி. அத்துடன் வந்த காரியம் முடிந்து நான் மறுபடியும் வாஷிங்டனுக்குப் பயணமாகி விடுவேன்.

பிபிசி குழுவில் நாங்கள் எட்டுப்பேர் இருந்தோம். எல்லாமே வெள்ளைக்கார முகங்கள், என்னுடையதை தவிர்த்து. பலபாதுகாப்பு அரண்களை தாண்டி, பதினைந்து நிமிடங்கள் முன்பாகவே வந்துவிட்ட எங்களை ஒரு வரவேற்பு அறையில் உட்கார வைத்திருந்தார்கள். அதுவே ஒரு ஜனாதிபதிக்கு தகுதியான கம்பீரத்தோடு இருந்தது. எங்கள் குழுவின் தலைவர் விவரணப்படக் கலையில் புகழ்பெற்ற பட்டிஸ்மித் என்பவர். ஜனாதிபதியைப்பார்க்க உள்ளே போகவேண்டிய நேரம் வந்ததும் இரண்டு பாதுகாவலர்களும், ஓர் உயர்அதிகாரியும் எங்களை அழைத்துச் சென்றார்கள். நான் மட்டுமே ஜனாதிபதியிடம் கை குலுக்கினேன். மற்றவர்கள் காமிராவுக்கு பின்னே நின்று கொண்டார்கள். எங்களை அழைத்துவந்த அதிகாரியின் முகத்தில் ஆச்சரியத்திலும் பார்க்க ஏமாற்றமே மிஞ்சியிருந்தது. பாதுகாவலர் படக்கென்று திரும்பி தன்நேரம் வீணாகிவிட்டது என்பதை அப்பட்டமா -கக்காட்டியபடி மறைந்துபோனார்.

ஜனாதிபதி என்னை சஞ்சயன் என்று உரிமையுடன் அழைத்தார். நான் பதிலுக்கு 'மிஸ்டர் பிரெசிடென்ட்' என்றேன். எங்கள் சம்பாசனை தொழில் நுட்பம், இந்தியாவின் எதிர்காலம், சாதாரண மக்களின் அன்றாட சந்தோசம் இவற்றையெல்லாம் தொட்டது.

இந்தியாவின் ஏவுகணைத்திட்டத்தின் சிருட்டிகர்த்தாவான ஒரு ஜனாதிபதியின் சிந்தனைகள் கவித்துவமாகவே இருந்தது என்னை வியப்பிலாழ்த்தியது. 'இங்கே பாருங்கள் சஞ்சயன், நான் நூறு கோடி மக்களைச் சிரிக்கவைக்க விரும்புகிறேன். உங்களுக்குப்புரிகிறதா?

நூறுகோடி மக்கள் சிரிக்கவேண்டும். இது முடியும். அவர் அதை சொன்ன விதம் அறிவை மீறிய தேவவாக்குபோல என் காதுகளில் விழுந்தது. என் தலை என்னையறிமால் அசைந்தது. அவர்தன் கனவை சொல்ல ஆரம்பித்தார். இந்தியாவைத் தொடுக்கவேண்டும்.

முக்கோண வடிவமான இந்தியாவை குறுக்கறுத்து ஆயிரம் புதுச்சாலைகள் ஓடவேண்டும். இணையம் மூலமும், சாட்டிலைட் மூலமும் இந்தியா முழுவதையும் இணைக்கவேண்டும். ஒவ்வொரு நூறு கிராமத்துக்கும் ஓர் இணைய சேர்வர். அதிலிருந்து ஒவ்வொரு கிராமத்துக்கும் மின்னஞ்சல், இணையதள வசதிகள். ஒரு புதிய EDUSAT என்ற செயற்கைகோளை விண்வெளியில் நிறுவுவதற்கான ரொக்கட் ஒன்று விரைவிலேயே ஏவப்படும். உலகத்திலேயே கல்விக்காக முற்றிலும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சாட்டிலைட் இதுவாகவே இருக்கும். இதிலிருந்து லட்சக்கணக்கான இந்தியக் கிராமங்களுக்கு கல்வி அறிவுப் போதனைகள் ஒலிபரப்பாகும். போக்குவரத்து நெருக்கடிகளில் அடிக்கடி மாட்டி விழித்துக்கொண்டு இந்தியாவின் புதிய நெடுஞ்சாலை திட்டங்களை நாங்கள் ஏற்கனவே பார்த்திருந்தோம்.

அப்துல் கலாம் "ignited minds" என்றார். இளம் மனங்களில் ஒரு தீ பற்றவேண்டும். வெளியே வரத்துடிக்கும் இந்திய இளைஞர்களின் உச்சமான திறமைகளை விடுவிக்கவேண்டும். இந்த அரிய மனிதர் சந்தேகமில் லாமல் தனது பரிவான உள்ளத்தில் கனவுகள் காணும் ஒரு நம்பிக்கைக்காரர்.

தேநீரும் பிஸ்கட்டும் பரிமாறினார்கள். தேநீரை சிறிய பீங்கான் கிண்ணங்களில் பருகியபடி ஜனாதிபதி தனது மாளிகையைப் பற்றிச்

( 15ம் பக்கம் வருக )

# Beyond Medicine and Global Impact
## மருத்துவத்துக்கும் உலகளாவிய தாக்கத்துக்கும் அப்பால்

*Dr.Indran B. Indrakrishnan is a distinguished gastroenterologist in Georgia who has transformed Digestive healthcare in the state through his exceptional clinical medical service and visionary leadership at Gwinnett Digestive Clinic & GDC Endoscopy Center, and as an adjunct Professor of Medicine at Emory University School of Medicine & Philadelphia Osteopathic school of Medicine.*

Dr. Indrakrishnan extends his impact beyond clinical practice. He serves on the boards of multiple nonprofit organizations, including Rainbow Village, which provides refuge for homeless mothers and children, and Meals by Grace, dedicated to feeding hungry children in Georgia. He has also led key fundraising initiatives for underprivileged children worldwide, demonstrating his dedication to social welfare.

His influence reaches beyond Georgia. As a fellow of prestigious medical institutions—including the American College of Physicians, the American College of Gastroenterology, the Royal College of Physicians and Surgeons of Canada, and the Royal College of Physicians of London—he has earned global recognition in Gastroenterology and Hepatology.



He is a past governor of the Georgia Chapter of the American Tamil Medical Association, past president of the Georgia Association of Physicians of Indian Heritage, past president of the Georgia Gastroenterological & Endoscopy Society, and a former board trustee of the American Tamil Medical

Association. He has served on the National Affairs and International Relations Committees of the American College of Gastroenterology, as well as the Health & Public Policy Committee of the American College of Physicians.

Through these public service roles and other initiatives, Dr. Indrakrishnan has worked to expand healthcare access and coverage for patients in Georgia and across the nation. His extensive research, editorial contributions to international medical journals, and invitations as a visiting professor and speaker further highlight his prominence in the field.

**Historic Recognition**

In an unprecedented honor, the Georgia State Senate passed a bipartisan resolution declaring March 10, 2025, as Dr. Indrakrishnan Day in Georgia. Supported by 47 senators from both parties, this marks the first time in Georgia's Senate history that a physician has received such recognition.

This is the third time the Georgia State Capitol has bestowed this distinguished honor upon Dr. Indra - krishnan by dedicating a day in his name for his relentless service to the community. Previously, the Georgia House of Representatives passed similar bipartisan resolutions in 2018 and 2024.

**Recognized Among the Most Influential Figures**

Dr. Indrakrishnan has been named one of the 25 Most Influential Asian Americans in Georgia by the Georgia Asian Times. In 2018, he became the first physician and Asian American to receive an official commendation from the Governor of Georgia—an extraordinary testament to his impact.

He has also received the Public Service Award from the American Tamil Medical Association and the Lifetime Achievement Award from the Tamil Information Center in Canada.

As a civic leader and public servant, Dr. Indrakrishnan has supported numerous nonprofit organizations, including Georgia Colorectal Cancer Roundtable, Fight Colorectal Cancer Inc., Leadership Gwinnett, Greater Atlanta Tamil Sangam, and he serves as a trustee of the Hindu Temple of Atlanta.

Dr. Indran Indrakrishnan was described as "something of a celebrity among South Asian immigrants" in The New York Times by Pulitzer Prize-winning writer Natalie Angier in a feature article titled "The Changing American Family". She highlighted the impact of figures like Dr. Indrakrishnan on American society, writing:

"Dr. Indrakrishnan is part of a new tide of immigration that has been sweeping America, upending old voting blocs, reconfiguring neighborhoods, diversifying local restaurant options, and casting a fresh perspective on the meaning of traditional family values."

Dr. Indrakrishnan's exceptional work and generous

# Beyond Medicine and Global Impact
# மருத்துவத்துக்கும் உலகளாவிய தாக்கத்துக்கும் அப்பால்

personality have changed the lives of those who have had the honor of knowing him. He is a man of great strength, with an unimpeachable reputation for integrity, intelligence, service, fairness, and kindness. By the example he has set, he has made the world a better place.

### A Legacy That Redefines Excellence

Dr. Indrakrishnan is a graduate of the Faculty of Medicine at the University of Colombo, Sri Lanka, and subsequently received postgraduate specialty training at world-renowned healthcare institutions in England, Canada, and the United States.

He lives in Sugarloaf Country Club in Duluth, Georgia,


Indran B. Indrakrishnan MD & his wife Gayathri Indrakrishnan CPA

with his wife, Gayathri, a CPA. Their daughter, Harini, a physician and graduate of Emory University and the Medical College of Georgia, is currently completing her Anesthesiology residency at the University of Chicago Medical Center.

Dr. Indrakrishnan's legacy is one of unyielding dedication and leadership. Whether in the hospital, the legislature, or the community, his influence continues to shape lives and policies. His work has transformed healthcare in Georgia and set a gold standard for service nationwide.

(Courtesy: Microsoft News - MSN)

## குரங்குகள் வாங்கும் பென்சன்...

(13ம் பக்கத்திலிருந்து )

சொன்னார். ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் காலத்து கட்டிடக்கலைஞர்களால் நிர்மாணிக்கப்பட்ட அந்த மாளிகையின் முதல் வைஸ்ரோய் ஏர்வின். கடைசி வைஸ்ரோய் மவுண்பேட்டன். என்றென்றைக்கும் அடக்கியாளலாம் என்ற எண்ணத்தில் பிரிட்டிஷார் எழுப்பிய மாளிகையில் அவர்கள் 17 வருடங்கள் மட்டுமே ஆட்சி செலுத்தினர்.

ஜனாதிபதி பேசிக்கொண்டிருந்தபோது எனக்கு இன்னொன்று புலப்பட்டது. இந்த கண்ணைப் பறிக்கும் சோடனைகளும், அலங்கார தூண்களும், மாளிகையும் அப்துல் கலாமின் மாபெரும் கனவுகளை தாங்குவதற்கு போதாத ஒரு சிறுகுடிசையாகவே எனக்கு அப்போது தோன்றியது.

நான் விடைபெறுமுன் கேட்டேன்: "மிகுந்த அழகுணர்வோடு பராமரிக்கப்படும் உங்கள் தோட்டத்துக்கு போவீர்களா? குரங்குகள் தொல்லைப்படுத்துவதில்லையா?"

"ஓ, குரங்குகள், அவை பெரிதாக என்னை தொந்தரவு செய்வதில்லை." இப்படிச் சொல்லியவாறே தன்மேசையில் பதித்த சிவப்பு பொத்தானை ஜனாதிபதி அழுத்தினார். அந்தப் பொத் -தானை அவருடைய மேசையில் ஒருவித ஒளிவுமறைவு -மின்றி ஒட்டி வைத்திருந்தார்கள். அதிலேயிருந்து தாறுமாறாக சென்ற வயர்கள் மேசையின் ஓரத்தில் ஸ்டேப்பிள் செய்யப்பட்டிருந்தன.

ஒரு விண்வெளி விஞ்ஞானியும், மாபெரும் நாட்டின் ஜனாதிபதியுமான அவருடைய மேசையிலே ஓடும் வயர்களை மறைத்து வைப்பது அவ்வளவு கடினமான காரியமா என்றுஎன்னை யோசிக்க வைத்தது.

"இந்தக் குரங்குகள் எங்களைத் தொந்தரவு செய்யாமல் பார்த்துக் கொள்ள சில உபாயங்கள் உண்டு" என்றார். அப்பொழுது ஜனாதிபதி எழுதிய இரண்டு புத்தகங்களை அவருடைய உதவி-யாளர் கொண்டு வந்து கொடுத்தார். ஆங்கிலப் புத்தகத்தில் கையொப்பமிட்டு என்னிடம் தந்தார். மற்றது தமிழ்ப் புத்தகம். அதில் தமிழில் கையெழுத்து வைத்து இதை எழுத்தாளரான உங்கள் அப்பாவிடம் கொடுங்கள் என்றார். நான் விட்ட இடத்தைப் பிடித்துக்கொண்டு என்ன உபாயங்கள் என்றேன்.

"காவல்கார குரங்குகள் எங்களுக்கு ஓயாது தொல்லை தரும். சிறிய குரங்குகளுக்கு பெயர் லங்கர். பெரிய குரங்குகளின் பெயர் மக்காக்கி. பயிற்சி கொடுத்த மக்காக்கி குரங்குகளை சங்கிலியில் கட்டி காவல்காரர்கள் சுற்றிலும் உலாத்துவார்கள். இவற்றைக் கண்டதும் சிறிய குரங்குகள் ஓடிவிடும், கிட்ட வராது". என் முகத்தில் தோன்றிய ஆச்சரியத்தை என்னால் மறைக்க முடியவில்லை. நாங்கள் தோட்டத்துக்கு போகலாமா? என்றார்.

"காவல் காக்கும் பெரிய குரங்குகளுக்கு சம்பளம் உண்டா?" என்றேன், பாதி நகையுடன்."நிச்சயமாக. ராஷ்டிரபதிபவன் ஊழியர்களின் பட்டியலில் அவற்றின் பெயர்களும் உண்டே".

உலகத்தின் ஆகப்பெரிய சனநாயகத்தின் அதிபதி என்னுடைய முழங்கையைப் பிடித்து தனது அற்புதமான தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார். கருணையே உருவான அந்த நல்ல மனிதருக்கு என்னுடைய மனக்கிலேசம் எப்படியோ தெரிந்துவிட்டது.

"அவை ஓய்வுபெற்ற பிறகு அவைக்கு பென்சனும் இருக்கிறது" என்றார்.



ப. ஸ்ரீஸ்கந்தன்

# ஞாபகம் துளிர்க்கிறதே - 48

## மனிசரின் கதை

“வாசலில் வந்து பார்த்துக் கொண்டு நிற்கிறாள்....”

“அடிக்கடி தடவுறாள்....கொஞ்சுறாள்....”

“என்னோடதான் படுக்கிறவள்...”

இவ்வாறான சம்பாஷனைகளையே இப்போது உற்றார், உறவினர், நண்பர்களோடு கதைக்கும்போது கேட்க வேண்டியுள்ளது. மனிசிமாரைப் பற்றி பேசுகிறார்களா, பிள்ளைகளாப் பற்றி பேசுகிறார்களா அல்லது.... ஒரே குழப்பமாக இருக்கிறது. இவர்களுக்கு என்னதான் நடந்துவிட்டது? கதையைக் கூர்ந்து கேட்டால்தான் இவர்கள் தங்கள் வளர்ப்புப் பிராணிகள் பற்றிப் பேசுகிறார்கள் என்பது தெரிகிறது.

சீ....மணக்கும்....மயிர் கொட்டும்....வீணி வடிக்கும் என்றெல்லாம் முன்னர் சீ கொட்டியவர்கள் இன்று அவற்றை அரவணைத்தபடி வீதியுலா வருகிறார்கள். பிள்ளைகளின் ஆக்கினையால் வீட்டுக்குள் குடிபுகுந்த இப்பிராணிகள் பெற்றோரின் செல்லப்பிள்ளைகளாகி அவர்களை படாதபாடு படுத்துகின்றன.

மகன் சுதனுக்குக் காய்ச்சல் வந்தால் குடி நீர் மட்டுமே வைத்துக் கொடுக்கும் வசந்தி, தன் பூனைக்கு இரண்டாயிரம் டாலர் செலவழித்து ஊசி போட்டதாகச் சொல்லுது. உஞ்சு என்றால் ஓடிவர....அடீக் என்றால் ஓடிப்போற தெருநாயை மட்டுமே தெரிந்திருந்த தம்பி, இப்ப நாய்களின் சாதிகளையும் பெயர்களையும் நிறங்களையும் விலா வாரியாகச் சொல்லுறான்.

கதைகளைக் கேட்க சிரிப்பு வருகிறது. ஆனால் சிரிக்க முடியாது. வளர்த்துப் பார்த்தால்தான் விளங்கும் என்று அட்வைஸ் பண்ணுகிறார்கள். கனடிய சட்டத்தை வேறு சொல்லி பயமுறுத்துகிறார்கள்.

டாக்டர் செலவு, நகம் வெட்டும் செலவு, இன்சூரன்ஸ், விடுமுறையில் செல்லும்போது எங்கே விட்டுச் செல்வது, அடிக்கடி வீட்டைத் துப்புரவாக்குவது, வெளியே கூட்டிக்கொண்டு நடை போவது என்ற இன்னோரன்ன சிக்கல்களுக்கும் மத்தியில் அவற்றை வளர்க்கிறார்கள் என்றால் அதில் சிரிப்பென்ன வேண்டியிருக்கிறது.

தேவையில்லாமல் ஏன் ஆசாபாசத்துக்குள் சிக்கிச் சுழலவேண்டும் என்பதே என் நிலைப்பாடு. அண்மையில் நண்பன் நிமலின் பூனை காணாமல் போனது. நண்பர்களோடு சேர்ந்து வீதி வீதியாகத் தேடினேன். படத்துடன் நோட்டீஸ் அடித்து கம்பங்களில் ஒட்டினான். கிடைக்கவில்லை. எனது ஊரில் மனிசர்கள் காணாமல் போயிருந்தனர்.

எழுத்தாள நண்பரின் பூனை சில வாரங்களுக்கு முன்னர் இறந்தது. அவரின் மகளின் நண்பிகள் பூங்கொத்துகளுடன் வந்து துக்கம் விசாரித்துச் சென்றனர். ஒவ்வொரு நாளும் காலையில் அறைக்குள் வந்து காலைச் சுரண்டி எழுப்பும் அந்தப் பூனை இறந்ததில் எழுத்தாள நண்பருக்குப் பெருங்கவலை. ஜெபம் சொல்லி பூனையை மரியாதையுடன் அடக்கம் செய்தனர்.

நண்பர் வீட்டுக்குப் போய் செற்றியில் ஒரு மூலையில் இருந்தபோது அவரது பூனை வந்து என் முன்னால் நின்று உறுமியது. அதனது இருக்கையில் நான் இருக்கிறேனாம் என்று நண்பர் சொன்னார். இன்னொரு நண்பர் வீட்டில் வளர்ப்பு நாய் என் மீது ஏறி விளையாடியது. காலை நக்கியது. ஒன்றும் சொல்ல முடியவில்லை.

பெரியப்பாவின் மகள் வரதாவின் கதைகளை விளங்கிக் கொள்ள நான் அவளின் பேரப்பிள்ளைகளின் பெயர்களையும், அதனுடன் கூடவே வரதா வளர்க்கும் இரண்டு பூனைகளின் பெயர்களையும் பாடமாக்க வேண்டியிருந்தது. மீராவும் எமியும் என்னமாய் கதைக்குதுகள் என்கிறாள். அவள் பூனைகளைப் பற்றித்தான் சொல்லுகிறாள் - குழப்பம் எதுவும் இல்லை.

இவ்வாறு சமூகத்தோடு இனி நான் சேர்ந்து வாழ வேண்டுமென்றால் வளர்ப்புப் பிராணிகள் பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பது எனக்குத் தெளிவாக விளங்கிவிட்டது. குறைந்தபட்சம் உறவினர்கள், நண்பர்கள் என்னென்ன பிராணிகள் வளர்க்கிறார்கள், அவற்றின் பெயர்கள்,. சாதி, குணாதிசயங்கள் என்பவற்றையாவது அறிந்து வைத்திருக்க வேண்டும். இல்லையெனில் நான் சமூகத்தில் தொலைந்துபோக சாத்தியங்கள் தெரிகின்றது.

நாய், பூனை பரவாயில்லை. எனக்கு பாம்பு என்றால் பேய்ப்பயம். இதை எழுதும்போதுகூட காலில் ஏதோ ஊர்வதுபோல இருக்கிறது. ஆனால், ஞானம் ஆச்சி அப்படியல்ல. அவர் பாம்போடு வாழ்ந்தார். ஆனந்தன்வடலி வீதியிலிருந்த பெரிய வளவுக்குள் ஒரு மண் குடிசையில் ஞானம் ஆச்சி தனியாக இருந்தார். எழுபத்தைந்து வயது இருந்திருக்கும். தேங்காய், மட்டைகள் விற்று சீவியம் நடத்தினார்.

அவரது வீட்டு முகட்டில் ஒரு பாம்பு அடிக்கடி வந்து போனது. ஆச்சியைக் கண்டதும் அது தலையைத் தூக்கிக் காட்டிவிட்டு கடந்து போகும். ஆச்சி அதற்கு முட்டை வைத்து பராமரித்தார். அது வீட்டைச் சுற்றி வரும்.

ஒருநாள் வீதிக்கு வந்த பாம்பை இளைஞர்கள் சிலர் அடிக்கத் தொடங்கினர். பாம்பு மூன்று தடவைகள் மண்ணைக் கொத்தியது. பாம்பு மன்னிப்புக் கேட்கிறது என்று பெரியவர் ஒருவர் சொல்ல இளைஞர்கள் அடிப்பதை நிறுத்தினர். ஆச்சி அன்றிலிருந்து சாப்பிடவில்லை.

இரவில் தேங்காய் களவெடுக்க வருபவர்களை பாம்பு விரட்டும். அதுவே ஆச்சியின் வீட்டை காவல் செய்தது. ஊர்ச்சிறுவர்கள் ஆச்சியை பாம்பாச்சி என்றே அழைத்தனர்.

மாரி காலத்தில் ஒருநாள் ஆச்சி கிணற்றினுள் தவறி விழுந்து இறந்து போனார். தூரத்து உறவினர் ஒருவர் ஆச்சியின் இறுதி விடயங்களைச் செய்தார். எப்படியும் பாம்பு வரும் என்று செத்தவீட்டுக்கு வந்த ஊரவர் உசாராக இருந்தனர். ஆனால் பாம்பு வரவில்லை.

ஆச்சியின் உடலை சுடுகாட்டில் எரித்துவிட்டு வந்த உறவினர் குளிக்கப் போனார். கிணற்றுக்குள் அந்தப் பாம்பு செத்துக் கிடந்தது.

# தமிழர் சமூக நிகழ்வுகளின் காட்சிகள்






தியாகி திலீபனின் முப்பத்தெட்டாவது ஆண்டு நினைவு தாயகம் உட்பட உலகளாவிய ரீதியில் கடந்த மாதம் எழுச்சியுடன் இடம்பெற்றது. நல்லூரில் அமைந்துள்ள நினைவாலயத்தில் பன்னிரண்டு நாட்களும் மலரஞ்சலி நிகழ்ச்சிகள் பக்திபூர்வமாக இடம்பெற்றன. தியாகி திலீபனின் வரலாற்றை எதிர்கால சந்ததியினருக்கு கடத்தும் வகையிலான ஆவணக் காட்சியகம் நினைவாலயத்தில் திறந்து வைக்கப்பட்டது.




தமிழின அழிப்புக்கு நீதி கேட்டு நீண்டகால இடைவெளியின் பின்னர் ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை முன்றலில் பேரணியும் போராட்டமும் கடந்த மாதம் 15ம் திகதி இடம்பெற்றது. புலம்பெயர் தமிழர் சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு தியாகி முருகதாசன் திடலில் இடம்பெற்ற உரைகளுடன் நிறைவுபெற்றது.




வடக்கு கிழக்கில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச நீதி கோரும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதம் கடந்த மாதம் இடம்பெற்றது. ஜெனிவாவில் இடம்பெறும் மனித உரிமை மகாநாட்டில் காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரம் முன்னெடுக்கப்பட்ட வேளையில் அதற்கு வலுவூட்டும் வகையில் இந்த உண்ணாவிரதத்தில் பெருமளவானவர்கள் பங்குபற்றினர்.

# தமிழர் தகவல்
# முப்பத்தைந்தாவது ஆண்டு பூர்த்தி மலருக்கு ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன

1991ம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெளிவர ஆரம்பித்த தமிழர் தகவல், அடுத்த மூன்று மாத முடிவில் (ஜனவரி 2026) முப்பத்தைந்து ஆண்டுகளை பூர்த்தி செய்கிறது. கடந்த 417 மாதங்களாக ஒவ்வொரு மாதமும் ஐந்தாம் திகதியில் அறாத்தொடராக சஞ்சிகை வெளிவந்து கொண்டிருக்கிறது. முக்கியமாக, கோவிட் தொற்றுப் பரவல் காலத்திலும் தவறாது அச்சில் வெளிவந்தமை இதன் சிறப்பம்சங்களில் ஒன்று.

எந்தவொரு அரசாங்கத்திடமிருந்தோ அல்லது நிறுவனத்திடமிருந்தோ நிதியுதவியைப் பெறாது, தமிழர் சமூக வணிக நிறுவனங்களின் விளம்பர உதவியுடன் வெளிவந்து கொண்டிருப்பதால் 'சமூகத்திலிருந்து சமூகத்துக்கு' (From the Community to the Community) என்ற மகுட வாசகம் தமிழர் தகவலின் முகப்பு அட்டையில் இடம்பெற்று வருகிறது.

முப்பத்தைந்தாவது ஆண்டு மலர் தயாரிப்புப் பணிகளை ஆரம்பித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம். முன்னைய ஆண்டுகளைப் போன்று முப்பத்தைந்தாவது ஆண்டு மலர் வெளியீடும் தமிழர் தகவலின் முப்பத்தைந்தாவது ஆண்டு விருது விழாவுடன் இணைந்ததாக அடுத்த ஆண்டின் முற்பகுதியில் இடம்பெறும். கனடாவின் மூத்த தமிழ் இதழ் (Premier Canadian Tamil Journal) என்ற பெருமையைக் கொண்ட இச்சஞ்சிகையின் முப்பத்தைந்தாவது ஆண்டு பூர்த்தி மலருக்கான கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

வழமைபோல மருத்துவம், சட்டத்துறை, குடியியல், வரலாறு, கல்வித்துறை, இலக்கியம் உட்பட்ட பொதுவிடயங்களில் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் கட்டுரைகளை எழுதலாம். இளையோருக்கும் மாணவருக்கும் தொடர்ந்து ஊக்கமளித்து வரும் வகையில் இரு மொழிகளிலுமான கட்டுரைகளை இவர்கள் எழுதலாம்.

தமிழர் தகவலின் நீண்ட பயணத்தில் முப்பத்தைந்தாவது ஆண்டு ஒரு மைல்கல்லாக அமைவதால் இதன் வரலாற்று முக்கியத்துவம் கருதி சிறப்பான இரண்டு தலைப்புகளில் சில கட்டுரைகளை பிரசுரிக்க விரும்புகிறோம். அவற்றுக்கான தலைப் புகள் கீழே தரப்பட்டுள்ளன.

இருபத்தியோராம் நூற்றாண்டின் முதற்காலில் கனடிய தமிழரின் வாழ்வும் வளர்மிகு வளங்களும்.
The Achievements and Resourcefulness of Canadian Tamils in the First Quarter of the Twenty-First Century.

இருபத்தியோராம் நூற்றாண்டின் முதற்காலில் உலக அரங்கில் தமிழரின் பன்முக வளர்ச்சியும் அதன் தொடர்ச்சியை நிலைநிறுத்தலும்.
The Multi-Faceted Growth and Challenges of Sustainability in the Global Tamil Community during the First Quarter of the Twenty-First Century.

இக்கட்டுரைகளையும் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எழுதலாம். கட்டுரைகள் கிடைக்கவேண்டிய இறுதிநாள் நவம்பர் மாதம் 30ம் திகதி. மேலதிக விபரங்கள் தேவைப்படின் 416 920 9250 இலக்கத்தில் பெயரையும் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்தால் தாமதமின்றி தொடர்பு கொள்ளப்படும். கட்டுரைகளை மின்னஞ்சல் வழியாக அல்லது தபால் மூலம் அனுப்பலாம்.

மின்னஞ்சல் முகவரி: tamilsinfo@sympatico.ca

தபால் முகவரி: P.O. Box - 3, Station - F, Toronto, ON. M4Y 2L4. Canada



யாழ்ப்பாணத்திலுள்ள தொல்லியல் சின்னங்களை பாதுகாக்க வேண்டுமெனக் கேட்டு, நல்லூரிலுள்ள மந்திரிமனை கட்டிடத்தின் முன்னால் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. மந்திரிமனைக் கட்டிடத்தை பராமரிக்கத் தவறியதால் இதன் ஒரு பகுதி கடந்த மாதம் இடிந்து விழுந்ததையடுத்து இந்த கவனயீர்ப்பு அக்கறையுள்ள பொதுமக்களால் மேற்கொள்ளப்பட்டது



இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளின் ஒருங்கிணைந்த அபிவிருத்தி வாய்ப்புகள் குறித்த ஆய்வு மகாநாடு இந்த மாதம் பத்தாம் திகதி முதல் மூன்று நாட்களுக்கு அனைத்துலக தமிழர் பேரவையி -னால் ஸ்காபரோவில் நடத்தப்படவுள்ளது. இது தொடர்பாக இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேராசிரியர் அமுது ஜோசெப் சந்திரகாந்தன், நிமால் விநாயகமூர்த்தி, முரளி சிவகுரு ஆகியோர் பங்குபற்றினர்.

# நாங்கள் இடம் மாறியுள்ளோம்!
# எங்கள் சேவைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன!

**Medcentre Health**

Synchronizing Health Sectors

IMPORTANT ANNOUNCEMENT

## WE'VE MOVED & EXPANDED!

Now serving you at our new location:

**2225 Markham Road, Ground Floor**
**(Markham Road & Finch Ave. Intersection)**
**Scarborough, ON, M1B 2W4**

Thank you for your continued trust.
We look forward to welcoming you to our new and expanded clinic!

**ONE LOCATION. COMPLETE CARE.**

- **Medcentre Urgent Care**
  (Walk-In Clinic & Urgent Care Centre – since 2014)
- **Medcentre Women's Health Care**
  (Women's Health Care Clinic – since 2022)
- Now Introducing:
  **Medcentre Pharmacy** (Urgent Care Pharmacy)

*Medcentre Pharmacy was launched to support integrated care in response to patient demand.*


வானிலை
கணிக்கக்கூடியது
ஆனால்
உங்கள் எதிர்காலம்
அப்படியல்ல
எங்கள் நோக்கம்
உங்கள்
எதிர்காலத்தை
பாதுகாப்பது
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
LIFE INSURANCE
CRITICAL ILLNESS
DISABILITY INSURANCE
NON-MEDICAL INSURANCE
SUPER VISAS
RRSP & RESP
WE TRULY CARE FOR YOU & YOUR LOVED ONES!
647 401 5800
ajithinsurance.ca
ajithsaba@gmail.com
10 Thornmount Dr, Scarborough, Ontario M1B 3J4

# DREAM CAREER

## Achievement Award 2025

**Sponsored by**

EENC.ca Employment and Education Network Canada Inc.

*GTA Jobs and Careers Newspaper is proud to present* ***DREAM CAREER ACHIEVEMENT AWARD 2025*** taking place on

***November 1, 2025 Toronto, ON.***

This event celebrates individuals who have achieved a major career milestone by securing employment in roles directly connected to their field of study or training.

- ***1,500 Attendees***
- ***300+ Award Recipients***
- ***5+ Employment Service Providers***

More details about the award ceremony will be available in the Fall issue of GTA Jobs and Careers Newspaper

***"An event to recognize, network, empower and celebrate career success"***

If your organization provides free employment services to the public and would like to collaborate with us, **please email contact@gtajobs.org**.
GTA Jobs and Careers Newspaper reserves the right to select participating organizations.







Chapel Ridge

FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community

## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை
உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.





### At Need Funeral Arrangements

We provide a full range of service
to families who have experienced a loss
of a loved one, including:

*• Vistation • Funeral & Memorial Service*
*• Reception • Burial • Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை





**Christeen Seevaratnam**
416-258-6759

**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

### *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**

- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**

- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1
www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

*A caring part of our community*

**Srisakthi Jewellery**

3351 Markham Road, Suite 131
Toronto, ON. M1X 0A6
(Markham & Steels - Red Building)
Srisakthijewellery1@gmail.com
B: 416 755 0559 C: 416 625 6677

**TVS CARGO**

AIR & SEA CARGO, WORLDWIDE COURIER
416-291-3232
info@tvscargo.com
www.tvscargo.com
3351 Markham Rd, Unit 113
Scarborough, ON M1X 0A6

**A1 Studio At GTA Square**

Rudy Ruthran
GTA Square, 5215 Finch Ave East, #103, Toronto, M1S 0C2.
rudyruthran@gmail.com
Tel: 416-587-5583



**NATHAN SRITHARAN**
Barrister & Solicitor, Notary Public

305 Milner Ave.
Suite #309
Toronto, Ontario
M1B 3V4
(Milner / Markham)

Tel: 416-499-2760
Fax: 416-499-6534
E-mail: sritharan@nathanlaw.ca

# JRB GROUP CORPORATION

Loans, Mortgages, Insurance, Visa,
Real Estate, Master Card, Credit Counselling

Best rate Mortgage Arranged

Almost All Services Available

**Business Loans 25K to 500,00**
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்படவுள்ள
சகல வர்த்தகர்களுக்குமான சிறப்பான சேவை!



FINANCE

**R. R. Rajkumar** B. Com (Hons), MBA
**647–289–6164 / 416–655–5577**

# வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?

## அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.

MATRIX LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION



**Even if the accident is your fault:**



Employed • Unemployed
Passenger • Pedestrian
Public transit
cyclist

WE ARE HERE TO HELP YOU

இலவச ஆலோசனைகளுக்கு:

**தீபன்**

24 Hours Direct Line

(416) 831-4444
(416) 505-9804

2190 Warden Ave., Suite 202, Toronto, ON M1T 1V6


KEV TAX
KNOWLEDGE & EXPERIENCE IS VITAL
www.kevtax.com
* CORPORATE INCOME TAX
* BOOKKEEPING & ACCOUNTING SERVICES
* PERSONAL INCOME TAXES
* QUALITY SERVICE WITH REASONABLE FEES
* FREE YEAR-ROUND CUSTOMER SERVICE
* CORPORATE AND SOLE PROPRIETORSHIP BUSINESS REGISTRATION
SENIORS / WELFARE RECIPIENTS
ALL RETURNS INCLUDE EFILE SERVICE
FREE
EFILE SERVICE
Ganthiy Selvarajah
(B.A. Sri Lanka)
TEL: 416.841.1866
FAX: 1.888.841.8829
kevtax.ganthiy@gmail.com


JUST LISTED!
5225 Finch Ave E 205, Toronto, ON
Middlefield & Finch
$499,000
Suitable for First time Homebuyers or Downsizers
Newly Renovated Washrooms & Kitchen
Close to Temples, Malls, Banks & All Amenities etc.
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS
Homelife/Future Realty Inc.
Independently Owned & Operated
HomeLife/Future Realty Inc.,Brokerage
205-7 Eastvale Dr,Markham ON. L3S 4N8
Bus: 905.201.9977
MULTIPLE LISTING SERVICE







## WALK-IN CLINIC

**1200 MARKHAM ROAD, UNIT 115,**
**SCARBOROUGH, ON M1H 3C3**
**T: 416 439 8085**















# சுரேனின் உயிர்காத்த குருத்தணு தானம்...

(08ம் பக்கத்திலிருந்து )

இருப்பதற்காக அமெரிக்காவிலிருந்து ஆஸ்திரேலியா வந்திருக்கிறார் ஜெகாத்திரி. புற்றுநோய் மருத்துவரை அணுகிய அவர், 2008ம் ஆண்டு தனது சகோதரியின் நான்கு வயது மகனுக்கு மரபணு மாற்று சிகிச்சை தேவைப்பட்டபோது தாமும் அதற்காகப் பதிவு செய்ததாகவும், ஆனால் அந்தக் குழந்தைக்கு யாருடைய மரபணுவும் பொருந்தாததால் குழந்தை இறந்து விட்டதாகவும் மனவருத்தத்துடன் ஜெகாத்திரி கூறியிருக்கிறார்.

அந்த சோகத்தின் நடுவிலும் வேறொருவருக்குத் தமது மரபணு பொருத்தமாக உள்ளது என்று தெரிந்து, அவருக்கு சிகிச்சை வழங்குவதற்காகத் தாம் குருத்தணு தானம் செய்ததாகவும் ஜெகாத்திரி கூறியிருக்கிறார். தனிமனித உரிமைகளைக் காப்பதற்காக, குறிப்பாக மருத்துவ விடயங்களில் தனிப்பட்ட ஒருவரின் விடயங்கள் மற்றவருடன் பகிரப்படாது என்பதால் அவரது குருத்தணு யாருக்குப் பயன்பட்டது, அதனால் அவர் குணமடைந்தாரா என்ற விவரங்கள் எதுவும் ஜெகாத்திரிக்குத் தெரியவில்லை. ஆனால் தமது குருத்தணு ஆஸ்திரேலியாவில் வாழும் ஒருவருக்குச் சென்றிருக்கிறது என்பது மட்டுமே அவருக்குத் தெரிந்திருக்கிறது.

ஜெகாத்திரி கூறியதைக் கேட்ட அந்தப் புற்றுநோய் மருத்துவருக்கோ, ஆர்வம் இன்னமும் அதிகமாகிறது. அவர் எப்போது தானம் கொடுத்தார். எத்தனை தடவைகள் கொடுத்தார் என்ற விவரங்களை ஜெகாத்திரியிடம் கேட்டறிந்த அவருக்கு, என்ன நடந்திருக்கிறது என்பது உடனே தெரிந்துவிட்டது.

பொருத்தமான குருத்தணுவைத் தேடிக்கொண்டிருந்த சுரேனின் சகோதரன் இந்த விவரங்களைக் கேட்டுக் கொண்டிருந்த புற்று நோய் மருத்துவரின் நண்பர். இவருக்கு, சுரேனுக்கு நடந்தவை அனைத்தும் அத்துப்படியாகத் தெரியும்.

2021ம் ஆண்டின் பிற்பகுதியில் சுரேனுக்குப் பொருத்தமான குருத்தணு தானம் செய்ய முன்வந்த ஒருவரை அடையாளம் கண்டுவிட்டதாக மருத்துவர்கள் கூறிய செய்தி, அதைத் தொடர்ந்து அந்தக் குடும்பத்தினர் அடைந்த ஆறுதல், 2022ம் ஆண்டு மார்ச் மாதத்தில் சிகிச்சை எவ்வாறு நடந்தது, அதன் பின்னர் தொற்று ஏற்படக் கூடாது என்பதற்காக இரண்டு வருடங்களுக்கும் மேலாக சுரேன் தனித்து வைக்கப்பட்டிருந்தமை, அந்தக் காலத்தில் அவரது இரண்டு சிறு பிள்ளைகளும் பாடசாலைக்குச் செல்ல முடியாமல் வீட்டில் இருந்து கொண்டே பாடங்கள் படித்தமை, சுரேனின் தாயார்கூட அவரை நேரில் பார்க்க முடியாத சூழல், இவை அனைத்துமே அந்தப் புற்றுநோய் மருத்துவருக்கு விலாவாரியாகத் தெரிந்திருந்தது. அவருக்கு குருத்தணு தானம் செய்தவர் வட அமெரிக்க கண்டத்தில் வாழ்பவர் என்பதைத் தவிர, அவர் யார் என்ற விவரம் எதுவும் இவர்களுக்குத் தெரியாது.

இதனை வாசிக்கும் நீங்களே இப்போது ஓரளவு உணர்ந்திருப்பீர்கள், ஜெகாத்திரியின் குருத்தணுதான் சுரேனின் உயிரைக் காப்பாற்றியது என்று.

ஜெகாத்திரி தனது சகோதரியின் நான்கு வயது மகனுக்காகக் குருத்தணு தானம் செய்ய முன்வந்து பதிவு செய்து அது தோற்றுப் போயிருந்தாலும், பதின்நான்கு வருடங்களுக்குப் பின்னர் அவருடைய குருத்தணுவுடன் ஒத்துப் போன ஒருவருக்கு அதனைத் தானம் செய்து அவரின் உயிரைக் காப்பாற்ற முடிந்திருக்கிறது.

இருவர் கதைகளையும் நன்கறிந்த அந்தப் புற்றுநோய் மருத்துவர், இருவரையும் சந்திக்க ஒழுங்கு செய்திருக்கிறார். இருவரும் சந்தித்துக்கொண்டபோது, இருவருமே தங்கள் பிள்ளைகளில் ஒருவருக்கு ஒரே பெயரை வைத்திருப்பது என்பதிலிருந்து, பகிரப்பட்ட ஆர்வங்கள், வாழ்க்கையில் ஒத்த பாதைகள் என்று, இருவருக்குமிடையில் பல ஒற்றுமைகளை அவர்கள் அடையாளம் கண்டிருக்கிறார்கள். அந்த அனுபவத்தை சுரேன் சமூக ஊடகம் ஒன்றில் பகிர்ந்துள்ளார்.

இது சுரேனின் கதை மட்டுமல்ல. தற்போது குருத்தணு மாற்று சிகிச்சை தேவைப்படுகிறது என்ற தேடல் நடந்து வரும் மற்றொரு ஆஸ்திரேலியாவாழ் தமிழரின் கதையாகவும் இருக்க வாய்ப்பிருக்கிறது. அதற்கு எமது பின்னணி கொண்டவர்கள் பலர் குருத்தணு தானம் செய்ய முன்வர வேண்டும், அதற்கான பதிவை மேற்கொள்ள வேண்டும். அதற்கான அழைப்பாகவே நடந்தவற்றை நான் பார்க்கிறேன்.

ஒரு சிறிய பட்டாம்பூச்சி சிறகடித்தால், அதனால் ஏற்படும் அலைகள் தூரத்தில் உள்ள வானிலை மாற்றத்தில்கூட தாக்கம் செலுத்தலாம் என்ற Chaos theory கோட்பாட்டின் அடிப்படையில், நாமெல்லோரும் சிறகடிக்கலாம், குருத்தணு தானம் செய்ய முன்வரலாம், அதனால் எங்கோ எவருடையதோ உயிரைக் காப்பாற்றலாம்.

நீங்கள் வாழும் நாட்டில் குருத்தணு தானம் எப்படி செய்வது பற்றிய மேலதிக விபரங்களை அறிய paalam2humanity@gmail.com என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொண்டு கேட்கவும். அல்லது பின்வரும் இணையத்தளங்களுக்குச் செல்லவும்.

அமெரிக்கா: https://www.nmdp.org/

ஆஸ்திரேலியா: https://stemcelldonors.org.au/

இங்கிலாந்து: https://www.blood.co.uk/stem-cell-donor-registry/

இந்தியா: https://datri.org/

இலங்கை: https://praana.lk/

பிரான்ஸ்: https://www.dondemoelleosseuse.fr/

கனடா: https://www.blood.ca/en/stemcells/donating-stemcells/

ஜெர்மனி: https://www.dkms.de/en/

இந்தக் கட்டுரை பற்றி நண்பர் ஒருவரிடம் கூறிய போது, பெல்ஜியத்தில் வாழும் ஓர் இலங்கைப் பெண்ணுக்கு குருத்தணு தானம் செய்து அவரது உயிரைக் காப்பாற்றியவர் இஸ்ரேலிய இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் என்ற கதையை என்னுடன் பகிர்ந்து கொண்டார். உலக நடப்புகளைக் கூர்ந்து பார்ப்பவர்களில் ஒருவனான எனக்கு, அந்த இராணுவத்தைச் சேர்ந்தவரும் ஒருவரது உயிரைக் காப்பாற்றி இருக்கிறார் என்பது இயற்கை எங்களுக்கெல்லாம் ஒன்றே என்பதை எடுத்துக் காட்டும் இன்னொரு உதாரணமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

# கலைமுகம் -4



எஸ்.கே. ராஜென் - மூத்த ஒலிபரப்பாளர்

# தமிழீழதேசம் மாண்பேற்றிய மாகலைஞன் துரைராஜா நித்தியானந்தன்

**சென்ற மாத கட்டுரையின் தொடர்ச்சி**

“காலமெல்லாம் நாதமுடன் உறவாடினாய் வரும் காற்றிலெல்லாம் நீயிருந்து இசையாகினாய்”

21.05.1994ல் காலம் ஆகிவிட்ட துரைராஜா நித்தியானந்தன் (நித்தி அண்ணர்) நினைவுமலர் தாங்கிய வரிகள் இவை.

தமிழீழ தேசப்பற்றாளனாக விளங்கிய இவரை 23.05.1994 அன்று தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் ‘நாட்டுப்பற்றாளர்’ என மாண்பேற்றினார்.

தமிழீழ தேசத்தின் ஒலி, ஒளிபரப்புக்களின் தொழில்நுட்பத்தை மிக லாவகமாகக் கையாண்டு வரலாறு படைத்த, தேசம் மாண்பேற்றிய ஒரு மாகலைஞன் துரைராஜா நித்தியானந்தன்.

ஒலி, ஒளி தொழில்நுட்பத்தில் தமிழீழத்தின் மேன்மை மிக்க தொழில்நுட்பவியலாளர், சிறந்த இசை ஞானஸ்தன் துரைராஜா நித்தியானந்தன், வீணை இசை பயின்று யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடி ரசிகரஞ்சன சபாவில் வீணை இசைக் கச்சேரி நிகழ்த்தி ஈழத்து இசை விற்பன்னர்களின் பாராட்டைப் பெற்றவர்.

இந்த இசை ஞானம் அவரது ஒலி, ஒளி தொழில்நுட்பப் பணிக்கு பெரிதும் உதவியது.


“மின்கலையில் புதுமைகள் புகுத்தி மக்களை மகிழ்வித்த விஞ்ஞான வித்தகர்” என நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் விளித்துள்ளார்.

“நித்தி எனும் பெருந்தகை பழகுவதற்கு இனியவர். உள்ளத்தில் களங்கமற்றவர். உதவுவதற்கு முந்துபவர். கலையை விலைபேசக் கூடாது என்ற கருத்தும் கலையுலகில் அவரை ஓர் எடுத்துக்காட்டாக விளங்கச் செய்வன” என்று திருமறைக் கலாமன்ற நிறுவனர், இயக்குநர் ‘கலைத்தூது’ அருட்பணி நீ.மரியசேவியர் அடிகள் பதிவிட்டுள்ளார்.

“எமது விடுதலைப் போராட்டத்தையும், போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் எமது தன்னிகரில்லாத் தலைமையையும் நெஞ்சார நேசித்த விடுதலை விரும்பி” எனத் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் ‘பிரிகேடியர்’ சு.ப.தமிழ்ச்செல்வன் கருத்துப் பகிர்ந்துள்ளார்.

“வரலாற்று விழாக்களாக நாங்கள் நடத்திய முத்தமிழ் விழா, தமிழிசை விழா, அரங்கேற்ற விழா, பண்பாட்டு விழா அனைத்துக்கும் தன் சக்திக்கு மேலாகப் பணியாற்றி விழாக்களின் வெற்றிக்குத் துணையானவர்” என்றும், “இனி நித்தியண்ணர் இல்லையென்பது உண்மையாகிவிட்டது. ‘இந்த மண் எங்களின் சொந்த மண்’ என்று தொடங்கி ‘வெற்றி பெற்றுத் தந்துவிட்டு நீருறங்குகின்றீர்’ என்பது வரை சரித்திரம் படைத்து, சாகாத பாடல்களாகிவிட்ட நூற்றுக்கணக் - கான பாடல்கள் காற்றில் கலந்து எங்கள் காதுகளில் விழும் வரை நித்தியண்ணர் நித்தியமானவர்” என்றார் விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர், ‘தாயகக் கவி’ புதுவை இரத்தினதுரை.

“1990ல் எமது போராட்ட மண்ணைவிட்டு இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் விரட்டப்பட்டபின் நிதர்சனத்தின் வளர்ச்சியில் மிகவும் தீவிரமாகப் பங்கேற்று, கடல் கடந்து சில நாடுகளுக்குச் சென்று, எமக்குத் தேவையான தொழில்நுட்ப உபகரணங்களைக் கொள்வனவு செய்து நிதர்சனம் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தது மட்டுமல்லாமல், தொழில் நுட்ப வேலைகளிலும் பெரும் சாதனை - யைப் படைத்துள்ளார். அத்துடன் நிதர்சனத்தின் பல தொழில்நுட்பவிய - லாளர்களையும் ஒலிப்பதிவாளர்களையும் படத்தொகுப்பாளர்களையும் உருவாக்கி உள்ளார்” என தமிழீழ விடுதலைப் - புலிகள் நிதர்சனம் பொறுப்பாளர் நா.தமிழன்பன் (ஜவான்) பதிவிட்டுள்ளார்.



“ஒலியின் தொடர்பை அதன் மூலச் செழுமை குறையாது ரசிகர்களிடத்திற் கொண்டு செல்லும் தொடர்புச்சாதனக் கையாள்கைத்திறன் நித்திக்குக் கைவந்தது போல வேறு எவருக்கும் வரவில்லை” என்பதுடன், “இசைக்கலை - ஞர்களுக்கு உதவியாக நித்தி கண்டு பிடித்த மின்னொளிச் சுருதி முறையை வரன் முறையான உற்பத்திப்பொருளாக ஆக்கிக்கொள்ளுதல் எமது கடன். நித்தியின் கலைச்சேவைகள் நிரந்தரமாகப் பொறிக்கப்படல் வேண்டும்” என விளம்பியுள்ளார் ஓய்வுநிலை முதுதமிழ்ப் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள்.

“புறமும் அகமும் வளர்ச்சி பெற்று அனைவரதும் அன்பிற்கும் பாத்திரமாய் வாழ்ந்த ஒரு தனி மானுடன் ‘நித்தி’. காந்தியைச் சுடக்கூட ஒரு பகைவன் இருந்தான். ஆனால், நித்திக்கு ஒரு பகைவன் தானும் இருந்திருப்பானா என்பது ஐயமே! சிரித்த முகம், இன்சொல், அடக்கம் இவை நித்தியின் அடையாளங்கள். அவை அவரோடு போயிற்று” என்கிறார் அகில இலங்கைக் கம்பன் கழகம் இ.ஜெயராஜ்.

“இன்று நாமிருவரும் ஒன்றாகி நின்று வென்றோம் என்றெண்ணும் போது நெஞ்சுக்கு நிறைவாக இருக்கிறது. இயந்திரங்கள், அதன் உதிரிப்பாகங்கள் என்று தினம் பழகும் தொழில்நுட்பவியலாளர்களுக்கும் நுண்கலைகளுக்கும் இடைவெளி அதிகம் என்ற கருத்தைப் பொய்யாக்கி, இசைக்கும் கலைக்கும் தொழில்நுட்பத்துக்கும் இணைப்புப் பாலமாக இருந்து இயக்கியவர் நித்தி - அண்ணர். நல்ல கலைஞானம் மிக்கவர், இசைஞானம் கொண்டவர், நல்ல ஒலித்துறை நிபுணர். எல்லாவற்றுக்கும் மேலாக நல்ல மனிதர். அவர் எம்மை விட்டுப் போய்விட்டார் என்று எண்ணுவதே நெஞ்சுக்கு அந்தரமாக இருக்கிறது” என இசைவாணர் எம். கண்ணன் குமுறியுள்ளார்.

(30ம் பக்கம் வருக)

# CANADA - The fifth largest recipient Country of Asylum Seekers

In 2023, Canada ranked as the fifth highest recipient country of asylum seekers.

A new global trends report released by the United Nations High Commissioner for Refugees (UNHCR) says Canada received 146,800 new claims by asylum seekers in 2023, up from 94,000 the year before.

Only four countries were ahead of Canada: the United States (1.2 million), Germany (329,100), Egypt (183,100) and Spain (163,200).

Last year was the first time Canada ranked in the top five in at least six years . In 2022, the country was in ninth place.

The Canadian government has enacted measures to curb the number of refugees and asylum seekers entering the country. In March 2023, Ottawa forced Quebec's Roxham Road, an unofficial border crossing, to close permanently and expanded the Canada-U.S. Safe Third Country Agreement to turn back refugees entering through the U.S. border.

However, Canada is not exempt from the worsening global crisis. The number of displaced people has increased every year for 12 years, according to the United Nations (UN) . The number of forcibly displaced people surged to 117.3 million in 2023 from 108.4 million in 2022. As of May, the UN agency said the number had already risen to 120 million , an eight per cent increase compared to last year.

The UNHCR report said that the growing displacement is caused by new conflicts and a failure to resolve long-standing crises .

Syria is experiencing the world's largest displacement crisis, with 13.8 million people displaced. In Sudan, 10.8 million have been displaced, and in the Gaza Strip, up to 1.7 million, or 75 per cent of the population, had been displaced by the end of last year.

"Behind these stark and rising numbers lie countless human tragedies," Filippo Grandi, the UN High Commissioner for Refugees, said in a UNHCR press release issued Thursday.

The report says 158,700 refugees were resettled in 2023. Canada accepted nearly 51,100 of them, the majority of whom arrived from Afghanistan (16,600), Eritrea (9,200), Syria (8,400), and Somalia (4,300).

## புறநானூறும் புதைக்கப்பட்ட....

(10ம் பக்கத்திலிருந்து )

வார்த்தையை விட்டதும் அதைப் பொறுத்துக் கொண்டு ஏதோ காரணத்துக்காக மாவளத்தான் அமைதியாக இருந்ததும் ஆகிய செய்திகள் மட்டுமே சொல்லப்படுகின்றன. புறநானூறு தொகுக்கப்பட்டபோதும் உரை எழுதப்பட்டபோதும் மட்டுமே இந்தத் தாயம் விளையாடிய செய்தி சொல்லப்படு -கின்றது. பாட்டில் இல்லாத இந்தச் செய்தி பிராமண வர்க்கத்தைப் பாதுகாக்க உண்மை ஒன்று கொன்று புதைக்கப்பட்டுவிட்டது என்பதை மட்டுமே சொல்லி நிற்கின்றது. பிராமண எதிர்ப்பு என்பது பெரியாரால் தோற்றுவிக்கப்பட்டதல்ல அது புறநானூறு காலத்திலேயே தோன்றிவிட்டது என்பதற்கு இந்தப் பாடல் சிறந்த சான்றாகும்.

## குடிவரவு விண்ணப்பங்களை...

(03ம் பக்கத்திலிருந்து )

'ஸ்ராட் அப் விசா' திட்டம் மற்றும் சுயதொழில் செய்பவர்களுக்கான திட்டம் என்பவைகளில் ஏற்கனவே காத்திருப்பில் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் ரத்துச் செய்யப்படக்கூடுமென குடிவரவு சட்டவாளர்கள் பலரும் அச்சம் வெளியிட்டுள்ளனர். ஏற்கனவே சமர்ப்பித்த விண்ணப்பங்களின் பரிசீலனைக் காலம் சுமார் 53 மாதங்களைத் தாண்டியுள்ளது. பின்னர் கிடைத்த விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும் காலம் 2027ம் ஆண்டு வரைக்கும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இவற்றுள் கணிசமான விணணப்பங்கள் கனடாவுக்குள் ஏற்கனவே வசிப்பவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றவை. இவர்களின் நிரந்தர வசிப்பிட விண்ணப்பங்களை தற்காலிக குடியிருப்பாளர் அந்தஸ்துக்கு மாற்றினால் இவர்கள் கனடிய எல்லைப்புற அதிகாரிகளால் கைது செய்யப்படும் அபாயம் இருக்கிறது. அதேசமயம் விண்ணப்பதாரிகளின் ஆவணங்களை ரத்துச் செய்வதற்கும், இடைநிறுத்துவதற் -கும், மாற்றுவதற்கும் குடிவரவுத்துறை பணியாளர்களுக்கு அதிகாரம் வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ள புதிய மசோதாவையிட்டு குடிவரவாளர் நலன் அமைப்புகளும், சட்டத்துறையினரும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

## தமிழீழதேசம் மாண்பேற்றிய மாகலைஞன்...

(28ம் பக்கத்திலிருந்து )

துரைராஜா நித்தியானந்தன் அவர்களால் சிறப்புற ஒலிப்பதிவு செய்யப்பட்ட காலத்தால் நிலை பெற்ற ஆயிரமாயிரம் தமிழீழ தேச கானங்கள் இன்றும் நம்  இதயங்களில் இடம்பிடித்துள்ளன.

எழுச்சிப்பாடகர் தேனிசைச் செல்லப்பா அவர்கள் தாயகம் வந்து நிகழ்த்திய இசைக்கச்சேரிகள் அனைத்திற்கும் ஒலியமைப்பால் மெருகூட்டி பாடல்கள் தேச உறவுகள் இதயம் நிறைய தன் உடல் உபாதையையும் பொருட்படுத்தாது காட்டு வழிப்பய ணங்கள் மேற்கொண்டு பணியாற்றியவர் நித்தி அண்ணா.

தமிழீழ தேசத்தின் பாடகர்கள் ஒவ்வொருவரின் குரல்களிலும் பாடல்களைப் பதிவாக்கிய பெருந்தகை. இசைவாணர் மு.கண்ணன் அவர்கள் முதல் இளம் இசையமைப்பாளர்கள் அனைவரதும் இசையை எழுச்சி குன்றாமல் இனிமையாய், தெளிவாய் ஒலிப்பதிவு செய்து தந்தவர் நித்தி அண்ணா என்றே அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்ட 'நாட்டுப்பற்றாளர்' துரைராஜா நித்தியானந்தன், தமிழீழ தேசத்தின் கலை வரலாற்றில் நிலைபெற்றுள்ளார்.

## 'பரு'வப் பிரச்சனை ...

(11ம் பக்கத்திலிருந்து )

வழக்கமான மொய்ச்சரைசர் (moisturizer) கிறீமுடன் கலந்து தடவி மசாஜ் செய்து கொள்ளலாம். ஓற்ஸ்மாவுடன் கொஞ்சம் தயிர் மற்றும் சிறிதளவு எலுமிச்சைச்சாறு கலந்து பூசி மெதுவான மசாஜ் செய்து பின்பு இளஞ்சூடான நீரில் கழுவலாம். மஞ்சள், சந்தனம் பூசி காய்ந்த பின்னர் கழுவிக் கொள்ளலாம். இப்படி ஏராளமான இயற்கை வழிமுறைகள் உண்டு.

தயிர், தேன், எசென்ஷியல் ஓயில் அல்லது தேங்காய் எண்ணெய் மற்றும் அப்பிள்சிடர் வினிகர் போன்ற கலவையினை கலந்து, அவ்வப்போது பூசிவர நாளடைவில் பருக்கள் மறைந்துவிடும். இது கண்களில் படாதவாறு கவனமாக செய்யவேண்டியது அவசியம். பருக்களின் மேல் Tea tree oil தடவலாம்.

இவை எல்லாவற்றையும் விட முக்கியமானது முகப்பருவுக்கு பல காரணங்கள் இருந்தாலும், ஒவ்வொரு தனி நபரின் காரணிகள் வேறுபடலாம், மாறுபடலாம். மருத்துவர்கள் மூலம் ஆய்வு செய்து குறிப்பாக அதற்கான காரணிகளைச் சரியாகக் கண்டறிந்து, முகப்பருவுக்கு காரணமான ஹோமோன்களில் சமநிலையை ஏற்படுத்த  ஹோமியோபதி மற்றும் அக்குபங்சர் மருத்துவ முறைகளால் பருவ வயதுப் பருக்களை குணமாக்கலாம்.

Real estate excellence, every time.

Rajmogan Selliah
Sales Representative

Direct: 416 569 3200
Email: srajmogan@gmail.com


Buy | Sell | Lease | Invest

210 - 80 Corporate Drive,
Toronto, ON  M1H 3G5
Office: 416 284 5555



Residential, Commercial and Investment Properties


ALL YOUR CATERING NEEDS
CALL 416 - NANTHA 1 ext. 1
416 - 626-8421 ext. 1
FEEL GOOD
Taste Together
நந்தா உணவகம்
NANTHA RESTAURANT
INDIAN / CEYLON TAMIL RESTAURANT IN GTA
Kipling & Steeles
(416-NANTHA-1 Ext. 2)
#18 - 5010 Steeles Ave W Etobicoke, ON M9V 5C6
Warden & Finch
(416-NANTHA-1 Ext. 3)
Bridlewood Mall #106 - 2900 Warden Ave, Scarborough, ON M1W 2S8
Middlefield & Steeles
(416-NANTHA-1 Ext. 4)
#2 - 2002 MiddleField Rd Markham, ON L3S 1Y5
(Beside Fresh Food City Super Store)
(416-NANTHA-1 Ext. 5)
#8 - 2200 Brock Rd, Pickering, ON L1X 2R2
Food Court - 6, Majestic City
(416-NANTHA-1 Ext. 6)
2900 Markham Rd, Scarborough, ON M1X 1E6
416 - NANTHA 1 | 416 - 626-8421
www.nantha.com


Build Your Dream Home
SABESAN'S CHOICE
We build 10,000sq. feet (minimum) warehouse from 139.00 per sq.feet.
400 Kilometre per hour Wind resistance.
Termite Proof
Compare traditional Building Energy Savings.
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
உங்கள் வீட்டுடன் இணைந்ததாக மேலதிக இருப்பிட வசதியை ஏற்படுத்த விரும்புகிறீர்களா?
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள் !
Sabesan
விருது பெற்ற தொழிற்றுறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
416 321 6420





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

MONDAY - FRIDAY
(416) 266-5161
(Near Kennedy Subway - Rainbow Village Building)

RAINBOW VILLAGE DENTAL OFFICE
2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB



டாக்டர் எம்.கே. முருகானந்தன்

# உட்புற வளி மாசடைதல் - 2

**செப்டம்பர் மாத கட்டுரையின் இறுதிப்பகுதி**

மறைமுகப் புகைத்தல் (Secondhand Smoke) என்பது ஒளித்திருந்து புகைப்பது என்பதல்ல. தான் புகைக்காவிட்டாலும் சுற்றாடலில் மற்றவர்கள் புகைப்பதால் ஏற்படும் பாதிப்பையே குறிக்கிறது. கார்பன் மொனோ ஒட்சைட், போர்மல்டிஹைட் உட்பட சுமார் 200 மேற்பட்ட புற்றுநோயைத் தோற்றுவிக்கக்கூடிய நச்சுப் பொருட்கள் மறைமுகப் புகைத்தலால் காற்றில் கலக்கின்றன.

அமெரிக்காவில் மட்டும் இவ்வாறு வீட்டு வளியில் கலக்கும் புகையிலைப் புகையினால் 3000 மேற்பட்டவர்கள் சுவாசப்பை புற்று நோயால் இறக்கின்றனராம். அத்துடன் 50000 பேர் இருதய நோய்களால் இறக்கின்றனர்.

குழந்தைகளிலும் இதனால் பாரிய பாதிப்பு ஏற்படுகிறது. நியூமோனியா, சளி நோய்கள், காதில் கிருமித் தொற்று போன்றவை ஏற்படுகின்றன. சிறியவர்களிலும் பெரியவர்களிலும் ஆஸ்த்மா தோன்றுவதற்கும் ஏற்கனவே இருக்கும் ஆஸ்த்மா மோசமடைவதற்கும் மறைமுகப் புகைத்தல் காரணமாகிறது.

இதைத் தடுக்க ஒரே வழி புகைக்காதிருப்பதுதான். அத்துடன் குழந்தைகளுக்கு அருகிலும், வீடு, தொழிலகம், உணவுச்சாலைகள் போன்ற மக்கள் கூடும் இடங்களிலும் புகைக்காதிருக்க வேண்டும்.

விறகு, காஸ், எண்ணெய், நிலக்கரி போன்ற எதை எரிப்பதாலும் வெளியாகும், புகை மற்றும் வாய்வுகள் வளியை மாசடையச் செய்யும். அடுப்பு, விளக்கு, குளிர் காயும் இடம் போன்றவற்றிலிருந்து வெளியாகும் புகைகள் உதாரணங்களாகும்.

வெளிப்படையாகத் தெரியும் புகையை விட நிறமும் மணமும் அற்ற கார்பன் மொனோ ஒட்சைட், நைதரன் டை ஒட்சைட் போன்றவை ஆபத்தானவை. தலையிடி, மாறாட்டம், ஓங்காளம், தலைச்சுற்று, களைப்பு போன்ற அறிகுறிகளை கார்பன் மொனோ ஒட்சைட் கொண்டு வரும்.

அதன் செறிவு அதிகமாயின் ஆர்ப்பாட்டமின்றி மரணத்தையும் கொண்டு வரலாம். நைதரன் டை ஒட்சைட் வாயுவால் கண், காது தொண்டை ஆகியவற்றில் அரிப்பு, மூச்சு எடுப்பதில் சிரமம் ஏற்படும். அத்துடன் கிருமித் தொற்றுகளுக்கும் வித்திடும்.

ரேடன் (Radon)

ரேடான் என்பது கதிரியக்கத்தின் சிதைவால் உண்டாகும் வளி வடிவக் கதிரியக்கத் தனிமமாகும். இது வீட்டின் சுவர், நிலம், அத்திவாரம், வடிகால்கள் போன்றவற்றில் ஏற்படும் வெடிப்புகளிலிருந்து வெளியேறுகிறது.

இதனால் அமெரிக்காவில் மாத்திரம் வருடாந்தம் 21,000 பேர் சுவாசப் புற்றுநோயால் நோயால் மரணமடைகிறார்கள் என அறிக்கைகள் கூறுகின்றன. பல நாடுகளில் இது பற்றிய பிரக்ஞையே கிடையாது

**ஆஸ்பரோஸ் அல்லது கல்நார்**

கூரைத் தகடுகளாக உபயோகிக்கும் ஆஸ்பரோஸ் ஆனது நுண்ணிய நார்களாலானது. இதன் தூசியிலிருந்து ஆஸ்பரோசிஸ் (asbestosis) எனப்படும் சுவாசப்பை அழற்சி, சுவாசப் புற்றுநோய் போன்றவை ஏற்படுகிறது.

இதை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்கு பாதிப்பு அதிகம் ஏற்டலாம் என்பதால் அவற்றை ஆரம்ப நிலையில் கண்டறிவதற்காகவே காலக்கிரமத்தில் மருத்துவப் பரசோதனைகள் செய்யப்படுகின்றன.

இவற்றைத் தவிர நாளாந்தம் நாம் உபயோகிக்கும் இன்னும் பல பொருட்கள் காற்றை மாசுபடுத்துகின்றன.

ஒட்டுப் பலகை, தளபாடங்கள், தரைக்கம்பளம் போன்றவற்றை ஒட்டுவதற்கு பயன்படுத்தும் திரவத்திலிருந்து வரும் போர்மல்டிஹைட் ஆனது கண்கடி, இருமல், தொண்டை அரிப்பு, சரும அழற்சி, தலையிடி, தலைப்பாரம் போன்ற பல பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றன.

வீடு, கழிப்பறை, சமையலறை போன்ற இடங்களை சுத்தப்படுத்தும் பொருட்கள் (Detergents, disinfectant cleaners) கரப்பொத்தான், எலி போன்றவற்றிற்கான கிருமிநாசினிகள், பெயின்ட் வகைகள் போன்றவையும் சூழலை மாசுபடுத்துகின்றன. அவற்றை உபயோகிக்கும் போது பயன்படுத்தும் முறை பற்றி தயாரிப்பாளர் தந்த குறிப்புகளை சரியாகக் கடைப்பிடிக்க வேணடும்.

இறுதியாக, இன்று ஒவ்வாமை எனப்படும் அல்ர்ஜியுடன் தொடர்புடைய நோய்கள் அதிகரித்துள்ளன. கண் கடி, காதுக் கடி, தும்மல், மூக்கால் ஓடுதல், தொண்டை அரிப்பு, இருமல், ஆஸ்த்மா. சருமநோய்கள் யாவும் அதிகரித்துள்ளன. ‘சூழுல் மாசடைகிறது, கவனிப்பார் இல்லை’ என அரசையும் மற்றவர்களையும் குறை கூறுகிறோம்.

எமது சூழலை, எமது வீட்டை, அதன் காற்றை சுத்தமாக வைத்திருக்க நாம் என்ன செய்திருக்கிறோம் என எம்மை நாமே கேட்பது பயனுள்ளது.

வெடிப்புள்ள சுவர்கள். ஜன்னல் பொருத்திய இடத்துப் பிரிவுகள், அழுக்கான பூஞ்சணம் படிந்த சுவர்கள், புகை அடுப்பு, நுளம்புத் திரி, சாம்பிராணிக் குச்சு, கரைந்து உதிரும் பெயின்ட் எனப் பலவற்றையும் அலட்சியம் செய்துவிடுகிறோம். எமது வீட்டின் உட்புற வளியை சுத்தமாக வைத்திருக்காவிட்டால் அதற்கு விலையாக நோய்களை வாங்க வேண்டி நேரும்.

கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டவருக்கு அதுதான் நடந்தது. படுக்கை அறையும் சுவாமி அறையும் அவர் வீட்டில் ஒன்றே. அங்கு சாம்பிராணி தினமும் கொழுத்திய புகையால் அலர்ஜியாகி இருமல் வந்தது. ஆஸ்த்மாவாக மாறிவிட்டது.

நீங்களும் அவதானமாக இருங்கள்.


OIL CHANGE SPECIAL $34.95
+ Tax & Disposal Fees
Semi-Synthetic Oil Change includes:
Up to 5 L Standard Motor Oil
New Filter
Free Vehicle Inspection
Complete Front & Rear Brake Replacement or $25 off on each
$50 OFF
FREE!
BRAKE OR SHOCK INSPECTION
LIMITED TIME OFFER
SEE STORE FOR DETAILS
MY MECHANIC
இப்போது
இரண்டு இடங்களில்!
MY MECHANIC AUTO & TIRE
4530 Steeles Avenue East
Markham, ON L3R 0L2
905-946-1000
1095 Ellesmere Road,
Scarborough ON M1P 2WP
416-757.1000
info@mymechanicauto.ca
mymechanicauto.ca


TM தமிழ் மிரர் Tamil Mirror
MIRROR THAT REFLECTS THE TAMIL COMMUNITY
20TH YEAR ANNIVERSARY
CELEBRATIONS &
AWARDS GALA 2025
15 NOVEMBER
time 4.30 PM
VEDIC CULTURAL CENTRE
4345, 14 TH AVE, AT
KENNEDY RD, MARKHAM
FOR MORE INFO: 416-697-0126

ISSN 1206-0585





